www.padippakam.com



# தென்மொழி

**'தமிழ்த் தேவி' முறிநெய் கண்ட**
**இராமன் புகழ் நீடு வாழ்க!**

புதுமைசெய இவனொருவன் யாவனெனப்
புருவத்தை மேலுயர்த்தி
மெதுவாகத் தலையசைத்து மேதைமையை
வெளிப்படுத்தி ஒருவா றாக
இதுவெல்லாம் அறிவியலுக்கு ஏலாத
என விடைத்தார் ஆங்கவர்தம்
முதுகுகண்டான் மூண்டெரியும் முறிநெய்யைப்
புதுப்புனைந்த இராமன் தானே!

உள்நாட்டுத் தொழில்வளத்தைப் பெருக்குவதாய்
உலகத்து நாட்டா ரெல்லாம்
கொள்ளைகொள ஈண்டவர்தம் முதலீட்டுக்(கு)
அங்காந்து நிற்போர்கூடித்
தள்ளிவிடப் பார்த்தாலும் தன்முயற்சி
குன்றாமல் தலைநி மிர்ந்தான்
ஒள்ளொளிசெய் முறிநெய்யைப் புதுப்புனைந்த
நந்தமிழன் இராமன் தானே!

போர்த்த இருள் கிழித்துவரும் செழும்பரிதி
எனத்தமிழர் பெருமை யோங்க
நீர்த்தங்கம் எனவுரைக்கும் கன்னெய்க்கு
நிகராக முறிநெய் கண்டு
சீர்த்திநிறை 'தமிழ்த்தேவி' எரிபொருளென்(று)
ஈண்டளித்த இராமன் கொண்ட
நேர்த்திமிகு பெரும்புகழே வையமெலாம்
நிறைக! வாழி நன்றே!

— இறை

## உள்ளே...


மாதிரித் தமிழ் நகரங்களாகச் சமனிலைப்புரங்கள் விளங்கட்டும்!

அச்சம்

நோயாளிக்கு ஏதமில்லை!

பிறக்கும்முன் குழந்தைகளுக்குக் கற்பித்தல்!

மக்களவை (இந்தியா சமயச் சார்பற்ற நாடா?)

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

செய்திகள்



சுவடி - 30
ஓலை - 9
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 கன்னி (செபுதம்பர் - 1998)


படிப்பகம்

www.padippakam.com



# நரிமிடத் திருந்துநாம் நாடுபெறுவோமே!

ஓ! இளை ஞர்களே! ஓ! இளை ஞைகளே!
கோயில், குளங்கள், கும்பிடும் சாமிகள்,
அறநிறு வனமெனும் ஆரவா ரங்கள்,
துறவி மடங்கள், தொலையா மதங்கள்,
இன்னின்ன வகைக்கெலாம் இந்திய ஆட்சியில்
பொன்னென்ன! பொருளென்ன! பொழுதுக்கும் விழாவென்ன!
மக்கள் என்பார்க்கு மண்ணுதான் உணவு!
தக்க திட்டங்கள் தாள்களில் உரைகளில்!
செயற்பா டெல்லாம் சிக்கல் பிக்கல்கள்!
வயல்விளைவு வான்தொழில் வருவன யாவும்
அமைச்சர் களுக்கும் அதிகாரி களுக்கும்
நமைச்சல் தீரா முதலாளி மார்க்கும்
கள்ள வாணிகர், கயமைசெய் கலைஞர்
குள்ளத் திருடர், கொள்ளையர், கொலைஞர்
ஆக இவர்க்கெலாம் அளந்து கொடுத்தது
போக, மிஞ்சினால் பொதுமக்கள் தமக்கு!
இந்தியா இதுதான்! எம்நாடும் இதுதான்!
சிந்தியது பொறுக்கிச் சிறந்திடல் எப்படி?

கழுதை தேய்ந்து கட்டெறும் பாகி
முழுதும் அதுதேய்ந்து சிற்றெறும் பாகி
இறுதியாய் ஒன்றும் இல்லாமற் போன
உறுதியைப் போல்தான் தமிழ்நாட்டு உருவம்!

ஒருபுறம் வடவர்; உட்புறம் பார்ப்பனர்,
தெருப்புறம் கன்னடர், தெலுங்கர் என்றாகிக்
கொல்லையில் கேரளர், கொடும்பட்டாணியர்
தொல்லைபஞ் சாபியர் சூழ்நிலம் தமிழ்நிலம்!
இன்றிவர்க் கிடையில்தான் எந்தமிழ் மக்கள்
நின்றாலும் படுத்தாலும் வாழ்க்கை நிகழ்த்துவர்!


இந்த நிலையினில் எந்தமிழ் வளருமா?
இந்தச் சூழலில் இனம்முன் னேறுமா?
பொதுமை மலருமா? புதுநலம் பூக்குமா
எதுதவறு, எதுசரி? எண்ணவேண் டாவா?

இவ்வாறே இருந்தால் எந்தமிழ் மொழியும்
ஒவ்வொரு நாளும் உருக்குலை இனமும்
நந்தமி ழகமும் நலிந்து நலிந்தே
இந்த உலகில் இல்லாமற் போகுமே!
ஆகவே, தமிழரே அறுதியாய் உரைப்பேன்!
சாகவே எனினும் ஒருங்குறச் சாவோம்!
உரிமை உரிமை உரிமை முழக்குவோம்!
நரியிடத் திருந்துநாம் நாடுபெறு வோமே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

படிப்பகம்

www.padippakam.com



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்



# தென்மொழி

மொழி—இனம்—நாடு

**நம்முழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமுழக்க, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி.30 தி.பி. உ0உகூ - கன்னி (செபுதம்பர்-'98) (ஓலை.9

# மாதிரித் தமிழ் நகரங்களாகச் சமனிலைப்புரங்கள் விளங்கட்டும்!

தமிழ்நாட்டில் ஆங்காங்குச் சமனிலைப்புரங்கள்(சமத்துவப் புரங்கள்) திறக்கப்படுவதோடு மேலும் பல்வேறு இடங்களிலும் அவற்றை அமைக்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சமனிலைப்புரங்கள் அமைப்பு முயற்சி ஒரு குமுகாய மாற்றத்திற்கான – புதிய குமுகாய அமைப்பிற்கான கால்கோள் எனலாம். இப் பணியைத் திட்டமிட்டு நிறைவேற்றிவரும் முதல்வர் கலைஞர் பெரிதும் பாராட்டுக்குரியர்!

ஆயினும், இதுகுறித்து மேலுஞ்சில கருத்துகளை நாம் முன்வைக்க விரும்புகிறோம். பல்வேறு சாதி, மத, வாழ்வியல் நிலைகளின் அடிப்படையில் தெரிந் தெடுக்கப்பட்டுச் சமனிலைப்புரத்தில் குடியேற்றப்படும் மக்களிடையே சமனிலை என்பது வீட்டமைப்பு, கிணறு, சுடுகாடு – இடுகாடு, தொழுகையிடம் என்பவற்றில் வேறுபாடொழித்துப் பொதுமை காண்பது மட்டுந்தானா, இவற்றுக்கு அப்பாலும் நீளுமா என்பதும் விளங்கவில்லை.

படிப்பகம்

www.padippakam.com



மேற்கூறிய அளவினதே என்றால் அது முழுமையான சமனிலையுமாகாது. அது நிலை பெறுதலும் அரிது!

இச் சமனிலைப்புரத்து மக்கள் – பிள்ளைகள் தமிழர் என்று ஒரே குலத்தினராகக் குறிக்கப்பெற்று எவ்வகைச் சலுகைகளேனும் அதன் அடிப்படையிலேயே அளிக்கப்படுதல் வேண்டும்.

இப்போதுள்ள சாதிவழிப்பட்ட இடவொதுக்கீட்டுமுறை அவ்வாறு சலுகைகளை அளிக்க இடந்தராதென்றால், அரசியல், குமுகாய நலப்பணித் தலைவர்கள் உள்ளிட்ட பல்துறைப் பெரு மக்களையுங்கூட்டி, தக்கவண்ணம் எடுத்துரைத்து வலியுறுத்தியும், ஏற்புடைய ஆம்புடைகளை(உபாயங்களை)க் கையாண்டும் ஒவ்வொரு பிரிவினரும் தத்தமக்குரிய ஒதுக்கீட்டளவில் சிறிது விட்டுக் கொடுக்க ஆவன செய்து முறையான சட்டத்திருத்தங்கள் கொணர்ந்து சமனிலைத் தமிழர்கள் மேம்பாட்டுக்கு வழிவகை செய்தல் வேண்டும். அவ்வாறன்றி முன்னைச் சாதிகளே குறிக்கப்பெறும்; இப்போதுள்ள சாதிகளின் அடிப்படையிலமைந்த ஒதுக்கீட்டின்படியே சலுகைகள் வழங்கப்படும் என்றால் சாதி மேன் மேலும் தளிர்த்தும் தழைத்தும் வளர்ந்துகொண்டிருக்குமே யல்லாமல் ஒருநாளும் அழியாது. ஆகவே, இது பயனற்ற முயற்சியேயாதல் ஒருதலை!

இனி, செத்தமாட்டை அப்புறப்படுத்துவது, சுடுகாட்டு – இடுகாட்டுப் பணிகளை மேற்கொள்வது முதலியனவெல்லாம் இன்றுங்கூடச் சிற்றூர்ப்புறங்களில் ஓரிரு சாதியார் மட்டுமே செய்யும் கட்டாய நிலை தொடர்ந்து வருகின்றது. கழிவறையைத் தூய்மைப்படுத்துவது அதனை யொட்டிய மலக்குழிக ளினின்றும் அதனை அப்புறப்படுத்துவது உள்ளிட்ட துப்புரவுப் பணிகளை உள்ளாட்சி அமைப்புகளே மேற்கொண்டாலும் துப்புரவுத் தொழிலாளிகள் என்னும் பெயரில் குறிப்பிட்ட ஓரிரு சாதியார் மட்டுமே செய்யுங் கட்டாயம் நீடித்துவருகிறது. அறிவியல் வானளாவ வளர்ந்தும் குமுகாயச் சீர்திருத்தங்கள் பல நிகழ்ந்தும் வருகின்ற இற்றைநாளிலும் பிறப்பின் அடிப்படையில் வந்த ஓரிரு சாதியாரே இத் துப்புரவுப் பணிகளைச் செய்து தீர வேண்டிய நிலை நீடிப்பதினும் பேரிழிவு வேறிருக்க முடியாது. சமனிலைப் புரங்களில் அத்தகு நிலைகளில் மாற்றங் காண்பதே உண்மையான சமனிலைக்கு வழிவகுக்கும்.

இத் துப்புரவுப் பணிகளை, எவ்வகைப் பாகுபாடுமின்றி அனைவரும் மேற்கொள்வதே மாந்தநேயமும் குமுகாய

படிப்பகம்

www.padippakam.com



நயன்மையுமாகும். முன்னேறியுள்ள ஏனைய நாடுகளைப் போல், எத்துணைச் செலவாயினும், தானியங்கிக் கருவியங்களைக் கொண்டே துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இது தமிழ்நாட்டை அயலவர் முதலீட்டால் தொழில்வளப்படுத்தும் முன்னேற்றத்தினும் முதன்மையானது; அனைத்து நிலைகளையும் கணிப்பொறி மயப் படுத்துவதினுந் தலையாயது!

சமனிலைப்புரம் கல்விக் கூடங்களில் தாய்மொழி மட்டுமே தொடக்கக் கல்வி மொழியாகக் கொண்டு, தமிழ்வாயிற் கல்வியே அளிக்கப்படுதல் வேண்டும். ஆசிரியர், மாணாக்கர் பெயர்களும், பெயர்களின் பெற்றோர் பெயர் முன்னெழுத்துகளும் கையொப்பங்களும் தமிழிலேயே அமைதல் கட்டாயமாக்கப்படுதல் இன்றியமையாதது. 'சமத்துவபுரம்' பெயரளவில்கூடப் பிறமொழிக் கலப்பற்ற செம்மை யான தமிழில் அமையாதது வருந்தத்தக்கது. அதனையும் சமனிலைப்புரம் என்றோ வேறாகவோ மாற்றுதல் வேண்டும்.

சமனிலைப்புரங்களில் சாதி, மதத் தலைவர்களின் சிலைகள் நிறுத்தக்கூடாது என்று மட்டுமே இப்போது வரம்பீடு வகுக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒருபுறம் பார்த்தால் அரசியல் தலைவர்களாகவும் மறுபுறம் பார்த்தால் சாதிக் காவலர்களாகவும் இருப்பவர்களும் கருதப்படுபவர்களும் பலர் உளர். ஆகவே, தமிழிய உணர்வும் உலகப் பொதுமை நோக்கும் கொண்டவனும் தவிர சாதி, மதம் மட்டுமன்றி அரசியல் உள்ளிட்ட எத்துறைத் தலைவர்களின் சிலைகளோ, கொடிகள், படங்கள் உள்ளிட்ட நினைவுக் குறிகளோ இடம் பெறலாகாது என்றும், வாழும் மக்கள் தம் தோற்றப் புனைவு களாலோ பெயர்களாலோ பெயரின் பின்னொட்டுகளான சாதிப் பட்டங்களாலோ சாதிமத வேறுபாடுகட்கு இடந்தரலாகாது என்றும் கடுமையான வரம்பீடு வகுத்து அதனை முழுமையாகக் கடைப் பிடிக்க ஆவன செய்தல் வேண்டும்.

இவற்றையும் இன்ன பிறவற்றையும் புறக்கணித்துவிட்டு, இதனை விளம்பர உத்திகளுள் ஒன்றாக மட்டுமே கொண்டு, மனம் வைத்துச் செயற்படுத்தாத தமிழ்நலப் பணிகளைப் போல் "நாங்கள் சட்டஞ் செய்தோம், மக்கள் கடைப்பிடிக்கவில்லை; யாரும் ஏற்க வில்லை'' என்று ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் நழுவிக் கொள்ளும் போக்கில் இச் சமனிலைப்புரங்களும் அமையுமேல் இது வீணான முயற்சியே. அவ்வாறன்றி அவை மாதிரித் தமிழ் நகரங்களாகத் திகழுமாக!

— இறை

படிப்பகம்

www.padippakam.com

# அச்சம்

— சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் —
இயக்குநர், தூயதமிழ் சொல்லாக்க அகரமுதலிகள் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

**தா**க்கு என்பதுவும் — தற்காப்பு என்பதுவும் ஒரு காசின் இரு பக்கங்கள் போல்வன! இரண்டு முயற்சிகளுமே — உயிரியின் படிநிலை மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றிய மூல வினைகளாகும்! உயிரிக்கு உள்ள உணர்ச்சிகளில் அடிப்படை உணர்ச்சிகளான பசியும் காமமும் போன்று — புற வினைமுறைக ளில் இவை மூல வினைகள் ஆகுவன!

வலிய உயிரியொன்று — எளிய உயிரியொன்றை, — அல்லது தன் இனத்தில் வலிவற்ற உயிரியொன்றைத் தாக்க முற்படுகையில் — தாக்குதலை எதிர்கொள்ள முடியாத நேர்உயிரி, அதன் முன்னீடாக வளைவது அல்லது சுருள்வது என்பது இயற்கை வினை! இவ் 'வளைவு' என்பது, (வலியதன் முன் எளியதானது—) ஒடுங்குவதன் அல்லது அடங்குவதன் அடையாளக் காட்சியாகும்! இவ்வியற்கை வினைமுறை — தோற்ற ஒற்றைப் புரையன் (one cellular object) தொடங்கி — மாந்தவுயிரன் ஈறாக அனைத்துயிரிக ளிடத்தும் படிவுகொண்டு தொடர்ந்தது; தொடர்கின்றது; தொடரும்!

தாக்கத்தை எதிர்கொள்ள முடியாத உயிரி, — அத் தாக்கத்தின் வழி நேரவுள்ள விளைவெண்ணி — அதற்கும் முன்னரேயே தான் உள்ளங் கொள்ளுவதாகிய வளைவு உணர்ச்சியே — மனவளைவே 'அச்சம்' என்னும் பெயரால் தமிழமாந்தனால் சுட்டப் பெற்றது!

இவ்வுணர்ச்சியைக் குறித்துத் தமிழர் வழங்கிய சொற்களாக— 1. அஞ்சு 2. அச்சு 3. அச்சம் 4. அச்சலிப்பு 5. வெருவு (வெரூஉ) 6. வெருட்சி 7. உட்கு 8. சூர் 9. கொன் 10. நடுக்கம் 11. அதிர்ப்பு 12. விதிர்ப்பு 13. விதர்ப்பு 14. பனிப்பு 15. உரு 16. உரும் 17. உரும்பு 18. புலம்பு 19. கவலை 20. கலங்கல் 21. கலக்கு 22. கலக்கம் 23. பேம் 24. அணங்கு 25. அடுப்பு 26. விறப்பு 27. பிறப்பு 28. வெறி 29. வெறுப்பு 30. வெடி 31. நாம் 32. நாமம் — என்னும் முப்பத்திரண்டு எண்ணிக்கையின, தமிழ் இலக்கிய இலக்கண நூல்களிலும் — சொற்றொகை நூல்களிலும் விரவலாகப் பரவிப் படர்ந்து காட்சி யளிக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



இச்சொற்களின் உள்ளீடுகளில் உள்ள பொருண்மைகளில், அச்சவுணர்ச்சியின் அகலிய வரலாறே ஆர அடங்கிக் கிடக்கின்றது!

அஞ்சு — அச்சு — அச்சம்

அஞ்சு + அல் > அஞ்சல்

அச்சு + அல் > அச்சல் > அச்சல் + இ > அச்சலி

அச்சலி + (ப்) + பு > அச்சலிப்பு

உய் : வளைவுக் கருத்து வேர்.

உய் + அல் > உயல் = வளைவு. உயலுதல் = வளைதல், அசைதல்

உயல் > உழல் (ய > ழ) உழல் > சுழல் (முன்மிகை)

உய் > ஊய் > ஊழ் (ய > ழ) = (வளைவு), முறை

உய் > அய் (உ > அ)

அய்>அய் + ஐ>அயை>அசை=வளை, சூழ். அசைத்தல் = சுற்றல்.

அய் > ஆய் = வளைவுறு ஆய் = வருந்து

ஆய் > சாய் (முன்மிகை) = வளை. சாய்தல் = வளைதல்

அய் > அய்கு > அகு (ஒ.நோ: வெய் > வெய்கு > வெகு)

அகு + ஐ > அகை = வளை

அகைதல் = வளைதல். 'அகைதல்..........வளைதல்' (கயா..நி 348)

அகு > அக்கு (ஒற்று இரட்டிப்பு) = வளைவு, வளை, சங்கு, சங்குமணி

'அக்கே போல் அங்கை ஒழிய விரல் அழுகி
துக்கத் தொழுநோய் எழுபவே' – நாலடி : 123 : 1. 2

அக்குமணி = சங்குமணி.

அகு > அங்கு (இடைமிகை) = வளை, வளைவு.

(மே.கா : அங்கு > சங்கு (முன்மிகை) = வளை)

அங்கு > அணம் (ஓரீறு) > அங்கணம் = வளைவு, முற்றம்

அங்கு + அதம் (ஓரீறு) > அங்கதம் = ஒன்றிருக்க – வேறொன்றாக

வளைத்து மொழியும் வசையுரை அல்லது நசையுரை
(காண்க : தொல். செய்யுள் : 8 : 125)

அங்கு > அஞ்சு = வளை, அச்சங்கொள், அச்சம்

(ஒ.நோ : தங்கு > தஞ்சு (தஞ்சு + அம் தஞ்சம்)
வங்கு > வஞ்சு + இ > வஞ்சி)

தாங்குவதற்கு அரிய தாக்குதல் ஒன்று பிறிதோர் உயிரியால் நேரும்போது — அல்லது அத்தாக்கம் நிகழவுள்ளபோது, அந்நிலைக்கு உட்பட்ட உயிரியின் உடற்கண் நேருவதாகிய வளைந்து ஒடுங்கும்

படிப்பகம்

www.padippakam.com



இயல்பு கொண்ட தோற்றநிலை அடிப்படையில் — இச் சொல் தோற்றப்பெற்றது.

தாக்கப்பேறு பெற்ற உயிரி, அத் தாக்குதலின் காரணமாக — வளைதலும் மடங்குதலும் சுருளுதலும் சாய்தலும் இயல்பு நிலைகளாம். எதிர்த்துத் தாக்குதற்குரிய வன்பும் தென்பும் பெற்றிராத உயிரி, தாக்குறுத்தும் உயிரியின் முன்பு வளைவுறுதலும் — வளைவுற்றவாறு ஒடுங்குதலும் இயல்பு நிகழ்ச்சிகள்! வலியது தாக்க முற்படும் போதே — அல்லது தாக்குதற்கென நோக்கி முன்வரும்போதே — தானே வளைவதுவும் வலிவவற்றவுயிரியின் பண்புக் கூறுகளில் ஒன்று! இந்நிலைமை குறித்தே வளைவுக் கருத்து அடிப்படையிலான 'அங்கு' என்பதினின்று, 'அஞ்சு' என்னும் சொல் உருவாக்கப் பெற்றுள்ளது!

'வளைகை' என்னும் இப் புறவினைத் தோற்றக் காட்சியின் பொருண்மையே, — அதற்குரிய உணர்ச்சிக் கருவாகிய அகவுணர்ச்சியையுங் குறித்து பொருள் வளர்ச்சியாக்கம் எய்தியது.

அஞ்சு > அஞ்சு = அச்சம்.

'அஞ்சுவந்த போர்க் களத்தான்' – மதுரைக் காஞ்சி : 28

'அஞ்சுவரத் தட்கும்' – மதுரைக் காஞ்சி : 140

அஞ்சு > அச்சு (வலித்தல் திரிபு) = அச்சம்

'அச்சற்று' (பதிற்றுப் : 90 : 2) 'நகையச்சாக (பரிபா : 3 : 33)

அச்சு + அம் > அச்சம் = அஞ்சுகை.

'அச்சத்தின் அகறல்' (தொல்.பொருள் 267)

அச்சு = அச்சம். அச்சு + உறு > அச்சுறு = அச்சம்பெறு, அஞ்சு

அச்சுறுதல் = அச்சமடைதல்

(1) 'இவ்வுல கெல்லாம் அச்சுற' – கலி : 134 : 9

(2) 'அச்சுறுகின்றது என் ஆவது ஆகுமால்' – கந்தபு. 4 : 10 : 19

அச்சு + உறுத்தல் = அச்சுறுத்தல் = அஞ்சச் செய்தல், அஞ்சுவித்தல்

'அஞ்சியச்சுறுத்தலும்' – தொல்.பொருள் : 112 : 12

அச்சு + உறுக்கை > அச்சுறுக்கை

அச்சுறுக்கை > அச்சறுக்கை = 1. அச்சம் உறுத்துகை (பயமுறுத்துகை)
2. எச்சரிப்பு (காண்க வின்சிலோ அகராதி)

அச்சறுக்கை > எச்சறுக்கை > எச்சறிக்கை > எச்சரிக்கை

'அச்சுறுக்கை' — என்னும் இச் செப்பச் சொல்லே, — இன்றைய வழக்கில் 'எச்சரிக்கை' என்றவாறு உயிரிசைவு மாற்றப்

படிப்பகம்

www.padippakam.com



பேற்றின்வழி (Harmonic sequence of vowels) கொடுந்திரிபடைந்து பரவலாகப் பயிலப் பெறுகின்றது.

(இந் நிலையுண்மையை உணர்ந்தறியாத செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் பின்னைப் பொறுப்பாசிரியர் — கீழ்க்கண்டவாறு தாறுமாறாகச் சிக்கலுற்றுத் திசை திருப்பிச் சுட்டியுள்ள செய்தியிது : 'தெலுங்குச் சொற்பிறப்பியல் அகர முதலித் தொகுப்பாளர் 'எச்சரிக்கை' என்னும் சொல்லுக்கு 'எழுச்சி + அறிக்கை' என்பதை மூலமாகக் காட்டியிருப்பது வேடிக்கையாக இருக்கிறது. 'எச்சரிக்கை' என்னும் சொல்லின் மூலம் காண — அதன் கன்னட வடிவம் என்ன என்று காண அவர்கள் மறந்துவிட்டனர்! கன்னடத்தில் இச்சொல் 'எழுதருவிகெ' = எழுந்த நிலை என்றுள்ளது. இதன் பொருள் விழித்த நிலை என்பதாகும். தமிழில் இதன்மூலம் 'எழுதருகை' என்றிருத்தல் வேண்டும். 'எச்சரிக்கை' என்பதன் மூலம் 'எழுதருகை' (விழிப்பு நிலை) என்பதே.

— காண்க : செ.சொ.பி. முன்னுரை : பக்கம் : 48

(உரிய திரிபறியாதும் திரித்தும் திசைத்தும் வெளிப்படுத்தும் இவ்வகை வேடிக்கை ஆய்வும் அறிவரை அச்சுறுக்கை செய்யும் வினையேயாம்!)

அஞ்சு + அல் (அல்' — ஈற்றுத் தொழிற்பெயர்) > அஞ்சல் = அச்சம்.

'அஞ்சலில் தானை வேந்தே' (சூளா : 531)

அச்சு > அச்சு + அல் > அச்சல் > அச்ச்ல் + இ = அச்சலி

அச்சலி + (ப்) + பு > அச்சலிப்பு = அச்சம்

'அரிகரியைக் கண்டவிடத்து அச்சலிப்பாய் ஓட'

— நக்கீர. ஈங் : 4

இருப்பு : அச்சங்களும் – வெறிகளும் — ஓர் அகரமுதலி


## தென்மொழி

- ஆண்டுக் கட்டணம் (மலர் உட்பட) உரு. 60.00
- வாழ்நாள் கட்டணம் உரு. 600.00
- தனி இதழ் உரு. 4.00

### வெளிநாட்டுக் கட்டணம்

1. வானூர்தி வழி ஆண்டுக் கட்டணம் உரு. 350.00
2. கப்பல் வழி ஆண்டுக் கட்டணம் உரு. 250.00


படிப்பகம்

www.padippakam.com

## மருத்துவம் குறைபாடுடையதே – ஆயினும் நோயாளிக்கு ஏதமில்லை!

தமிழ்நாட்டின் முப்பதாண்டுக் காலச் சிக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது; காவிரித் தொடர்பான சிக்கல் தீர்ந்து விட்டது என்று உரக்கப்பேசியும் 'காவிரிகொண்டான்' என்று விருது முழங்கியும் வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண் டிருக்கின்றன. மறுபுறம் 'இது தமிழ்நாட்டு மக்களுக்கு இழைக்கப்பட்ட இரண்டகம்; மாபெரும் மோசடி' என்று எதிர்குரல்கள் எழும்புகின்றன. உண்மையில் இவை இரண்டுமே மிகையானவை என்றே கருத வேண்டியுள்ளது.

கடந்த மாதம் தில்லியில் நடைபெற்ற காவிரித் தொடர்பான உடன்படிக்கை என்பது கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன் காவிரித் தீர்ப்பாயம் வழங்கிய இடைக்கால தீர்ப்பை நிறைவேற்றுவது பற்றியது மட்டுமே. அடுத்த ஆண்டில் தீர்ப்பாயத்தின் முழுமையான தீர்ப்பு வரவிருப்பதால், அதன் ஈற்றயல் நிலையில் செய்யப்பட்டுள்ள இவ் வொப்பந்தம் அவ்விறுதித் தீர்ப்பு வருங்கால் தானே செயலிழந்துவிடும்.

இவ்வொப்பந்தத்தின்படி இப்போது அமைக்கப்பட்டுள்ள ஆணையம் செயற்படுத்தும் அதிகாரமுடையதன்று. ஆணையத்தின் தலைவராகத் தலைமையமைச்சர் அதில் இடம் பெற்றிருப்பதாலேயே அவர் செயற்படுத்த இணக்கமாக வழிவகை செய்வார் என்றும் நம்புதற்கில்லை; அப்படி நம்புவதாயின் ஆணையமேகூட தேவை யில்லை. அன்றியும் அவர் செயற்பாடு மேனாள் தலைமையமைச்சர் இந்திரா அம்மையாரின் தலையீடு போன்றதாகவும் இருக்கலாம்!

இனி, இவ்வாணையம் அதிகார வலிமை பெற்றதென்றே ஈண்டுப் பேச்சுக்காக வைத்துக்கொண்டாலும், தொடர்புடைய சிக்கலைப் பொறுத்தவரை ஆணையம் செயற்படுத்துதற்கு ஏதுமில்லை என்பதுதான் நிலைமை. இவ்வாண்டு வேளாண்மைக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்பது கண்கூடு. ஆகவே இவ் வொப்பந்தம் 'மருத்துவம் குறைபாடுடையதே; ஆனாலும், நோயாளிக்கு ஏதமில்லை!' என்னும் அளவினதே.

ஆனால் அரசியல் நோக்கோடு, ஒப்புக்குச் சப்பாணியாகச் செய்யப் பட்டுள்ள இவ் வொப்பந்தத்தால் முப்பது ஆண்டுக் காலச் சிக்கல் முழுதுந் தீர்ந்துவிட்டதாக நிமிர்ந்து பேசி வெற்றிவிழாக் கொண்டாடிக் களிக்கத் தக்க சிறப்புடையதும் அன்று; இரண்டகம், மோசடி என்றெல்லாம் சிறுமைப்படுத்தத் தக்கதும் அன்று.

அடுத்த ஆண்டில் தீர்ப்பாயத்தின் இறுதித் தீர்ப்பு வருங்கால், அது தொடர்பான நடவடிக்கைகளில் இத்தகைய குறைபாடுகள் நிகழாவண்ணம் விழிப்பாக இருத்தல் வேண்டும். அதற்கு இதிலுள்ள குறைபாடுகளை விளங்கிக்கொள்வது இன்றியமையாதது. குறை பாடுகளைச் சுட்டிக்காட்டுவோர் அனைவரையுமே எதிரிகளாகக் கருதுவதைத் தவிர்த்து, உண்மை நிலையை உணர்ந்து ஆவன செய்வதில் ஆட்சியாளர்கள் அக்கறை கொள்ளுதல் வேண்டும். — கடுங்கோ

படிப்பகம்

www.padippakam.com



# பிறக்கும்முன் குழந்தைகளுக்குக் கற்பித்தல்!

ஆங்கிலம் : ஆர். நீரசா. தமிழில் : தமிழம் பன்னீர்.

அமெரிக்கா, சீனா, உருசியா ஆகிய நாடுகளிலும், சில தொலைக் கிழக்கு நாடுகளிலும் கடந்த பத்து ஆண்டுகளில் பிறந்த 35000 குழந்தைகள் அறிவுக் கூர்மையுடன் பிறந்ததாக ஆராய்வாளர்கள் கண்டனர். அவற்றுக்குப் பிறந்தபின் பெறக்கூடிய கல்வி நலன் பிறப்புக்கு முன்பே வாய்த்திருந்தது. பிறப்புக்குமுன் கற்பது அண்மைக் காலக் கொள்கை அன்று என்பது 6ஆம் நூற்றாண்டு ஊதர்களின் 'தால்முடி'(Talmudic) எழுத்துகளாலும், சீன, சப்பானிய இலக்கியக் குறிப்புகளில் இருந்தும் தெரிய வருகின்றது.

அமெரிக்காவில் சீட்டில் நகரில் முற்பேறு கால மருத்துவமனை இயக்குநராகவும், மனவளர்ச்சி நூலகராகவும் மர். பிரெண்டு லோகன் உள்ளார். அவர் 'ஒலித்தூண்டி'(BABY PLUS) என்னும் புதிய கருவி ஒன்றை வடிவமைத்துள்ளார். அது கருவுற்றிருக்கும் பெண்களின் வயிற்றில் வளரும் முதிர்கரு ஒலித் தூண்டலுக்காகப் (Foetal Sonic Stimulation) பயன்படுகிறது. அதைப் பயன்படுத்திய தாய்மார்கள் பலரிடமிருந்து ஊக்கந் தரும் பாராட்டுகள் குவிந்தன. இப்பொழுது அந்த உத்தியை (Technique) அறிவியல் கண்ணோட்டத்தில் மேலும் ஆராய்கின்றனர்.

மர். பிரெண்டுலோகனும், அமெரிக்க, உருசிய, மலேசிய நாட்டு அறிஞர்கள் சிலரும் அண்மையில் சென்னையில் கூடினர். மாந்தனின் உள்ளார்ந்த ஆற்றலை மேலும் அதிகரிக்க வல்லதென்று கருதும் ஒரு புரட்சியின் தொடக்கத்தைப் பற்றி அவர்கள் விளக்கினார்கள். தாயின் கருப்பையில் கருக்கொண்ட தொடக்க நிலையில் இருந்தே குழந்தை பற்றிய தெளிவான செய்தி தரும் இக்காலத் தொழில் நுட்பு முன்னேற்றம் நமக்குக் கிடைப்பதால் இந்த ஆய்வு ஒரு சிறப்பிடத்தைப் பெறுகிறது.

பள்ளியில் பயிலும் ஒரு மாணவனைப் போலப் பிறக்கப் போகும் குழந்தை ஒரு குடும்பத்தின் புதிய உறுப்பினராக இருக்கும் போது, அதை ஏன் மருத்துவத் தொல்லையாகக் கருத வேண்டும்? இந்தக் கேள்விக்கு மர். பிரெண்டுலோகன் அவ்வாறு கருத வேண்டியதில்லை என்கிறார். குழந்தை பேறுகாலத்திற்குமுன் கற்கும் நிலை ஏற்பட்டுவிட்டது என்பதைக் குறிக்க நரம்பியல் வல்லுநர்களின் பெரும்பான்மை முடிவுகள் உள்ளன. அதனால் கருப்பையில்

படிப்பகம்

www.padippakam.com



காப்பாக உள்ள குழந்தை நாம் கற்பனை செய்யக் கூடியதைவிட அதிக அறிவோடு கற்கவும் உள்ளுணர்வை வெளிப்படுத்தவும் கூடும் என்கிறார்.

தாயின் சூழலில் கருமுளை ஒவ்வொன்றையும் ஒவ்வோர் ஒலியையும் துல்லியமாக உணர்கிறது. அவளுடைய குரலொலி, பேச்சு, வானில் பறக்கும் வானூர்தியின் ஒலி ஆகியவற்றையும் அது கேட்கிறது. தாயின் அரத்தம் கொப்பூழ்க் கொடியில் (Placenta) 65 ஒலிச் செறிவளவில் (Decibel) கடப்பதை மட்டுமல்லாமல், தன் தாயைக் கடந்து செல்லும் தொடர் வண்டி ஒலியையும் அவளுக்கு எத்துணை அளவுக்குக் கேட்கிறதோ அவ்வளவுக்குக் கருமுளைக்குக் கேட்கிறது. குழந்தை பேணி வளர்க்கப்பெறும் ஓர் அமைதியான இடமாக அதன் தாய்வயிறு இருக்கிறது என்று நாம் எண்ணிக் கொண்டிருக் கிறோம். ஆனால் அது அவ்வாறு இல்லை. குழந்தையைச் சுற்றிலும் எல்லா வகையான உயிர் வேதியல் (Bio Chemical) நடைமுறை இயக்கங்களின் இரைச்சல் மிகுந்த ஓர் ஆலைச் சூழலைப் போலிருக்கும்.

கருப்பையில் கருவுற்றபிறகு 8இல் இருந்து 18ஆம் கிழமைவரை குழந்தையின் மூளை வளரத் தொடங்குகிறது. அப்பொழுது மூளையின் உயிரணுக்கள் (Cells) ஒரு நிமையத்திற்கு 1இலிருந்து 2.5 இலக்கம் மேனி உருவாகின்றன. அதே சமையத்தில் ஏனைய சில உயிரணுக்கள் அழிகின்றன.

பேறு காலத்தின் போது மூளை நரம்பணுக்கள் (Neutons) உருவாக்கிய பெரும்பாலான 75–90% உயிரணுக்கள் இறக்கின்றன என்று மர். பிரெண்டுலோகன் கூறுகிறார். இப்படிப்பட்ட நிலையில் அவர் அணியினர், அப்படி அழிந்துபோகத் திட்டமிடப் பட்டிருந்த உயிரணுக்களுக்குப் புறத் தூண்டுதல் மூலம் பயிற்சி கொடுக்க முயற்சி செய்தனர். அதனால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மூளை உயிரணுக்கள் காப்பாற்றப்பட்டன. உயிரணுக்களுக்கு இடை யில் உள்ள தொடர்புகளோடு அவற்றில் நேர்கிற கடத்தல்களின் விரைவு, செய்திச் சேமிப்பு இடங்களுக்கு இடையில் நரம்பணுச் சந்திப்பில் (Synaptic) ஏற்படும் இருவழித் தொடர்பு ஆகியவை மிக விரைவாகவும் அதிகத் திறமையோடும் நடைபெற்றன.

கருக் காலத்தின்போது தாய்க்கு உரிய உணவு அளிப்பது, அதன் பின் குழந்தையை நல்ல பள்ளியில் படிக்கவைப்பது, ஆகியவற்றைத் தவிர மர். பிரெண்டுலோகன் இப்பொழுது தாயின் கருப்பைக்குள் சென்று குழந்தையின் மூளை அமைப்புக்கு உதவ விரும்புகிறார். எந்த மொழியில் பேசினால் கருப்பையில் உள்ள குழந்தை மறுமொழி

படிப்பகம்

www.padippakam.com



தருமோ அந்த ஒரேமொழியில் – தாயின் கருப்பைக்கு எந்த ஒலிகள் பழக்கமோ அந்த ஒலிகள் மூலம் – பேசி அதன் மூளை அமைவதில் அவர் உதவுகிறார்.

இப்பொழுது அவர்கள் கருமுளையுடன் தொடர்புகொள்ளு தற்கு மொழி ஒன்றை உருவாக்க உகந்த சொற்றொகுப்பு (Vocabulary) ஒன்றைத் தேடினர். எந்த ஓர் எளிய, மீண்டும் மீண்டும் செய்யப் பெறும் தூண்டுதலும் அந்த உயிர்ப்பொருள் (Organism) இயக்கத்தில் ஒரு நிலையான தாக்கத்தை ஏற்படுத்துவதைக் கண்டனர். அந்தத் தாக்கம் மிகக் குறைந்த பதிப்புத்தர (Imprint) அளவுக்கு (Standard) ஏற்றபடி அமைந்திருந்தது. அப்படிப்பட்ட ஒலித் தூண்டுதலானது செய்திக் குறிப்புகள், ஒப்பீடு, மாறுபாடுகள் ஆகியவற்றின் தகவீட்டை (Ratio) விரைவுபடுத்துவதும் கண்டறியப்பட்டது. இது நல்வாய்ப் பாக நினைவாற்றல் கருவூலத்தை அமைக்க உதவுவதாகும்.

1982இல் மா். பிரெண்டுலோகன் நெஞ்சகப் பாடத்திட்டம் (Cardiac Curriculam) என்னும் முற்பேறுகாலத் தூண்டல் நிகழ்ச்சித் திட்டத்தை (Pre–Natal Stimulation) உருவாக்கினார். பின்பு ஒலி யாக்கியாகச் (Tone Generator) செயற்படும் நுண் சில்லு (Micor Chip) கொண்ட 'ஒலித்தூண்டி' (Baby Plus) என்னும் வாணிகப் பெயர் கொண்ட ஒலிக் கருவி ஒன்றைச் செய்தார். கருப்பையுள் ஏற்படும் ஒலிநிலை அளவுகளை (Parameters) நீர்வகை ஒலியளவி (Hydro Phone) மூலம் பதிவு செய்தனர். தாயை அணுகும் எல்லா ஒலிகளும் அவள் வயிற்றுப் பள்ளத்தை ஊடுருவிச் செல்கையில் சிறிது ஆற்றல் தணிந்து 30–35 ஒலிச் செறிவளவுக்குக் குறைகின்றன. அவற்றை ஒலியிழைகளில் (Audio Casettes) பதிந்த பிறகு எண் உரு போலிகைக் கருவிகளில் (Digital Sampling Devices) மீண்டும் ஒலிக்கச் செய்து அதில் தேவைப்படும் மாற்றங்களைச் செய்தனர். கருப்பையின் புற இயக்கங்கள், அதில் உள்ள பாய்மம், (Fluid) வயிற்றுத் தசைநார், ஆகியவற்றின் தடைகளால் ஏற்படும் ஒலிக் குறைவை ஈடுசெய்ய அந்த ஒலிகளை 35 ஒலிச் செறிவளவுக்கு உயர்த்துகின்றனர். மீண்டும் அந்த ஒலியைக் கருப்பையுள் அனுப்பிய பொழுது அது தாயின் நெஞ்சகத் துடிப்புப் போல் துல்லியமாக ஒலித்தது.

ஆய்வகச் செயற்கைக் கருப்பையுள் இந்தத் தூண்டல்களைச் செலுத்தி ஆய்வு செய்து, அவை மூலப்பதிவுகளோடு ஒத்திருப்பதை உறுதி செய்தனர். நேரப் பகுப்பாய்வியைக் (Time Analyser) கொண்டு இந்த முடிவுகளை ஒரு காட்சித் திரைமீது (Visual Format) விழச் செய்து ஒப்பிட்டுப் பார்த்தனர். இப்பொழுது கருப்பையை அடைந்த

படிப்பகம்

www.padippakam.com



(ஒலியும் ஒலிப்புத் தகவீடுமாகிய) தூண்டல்கள் தாயின் நெஞ்சகத் துடிப்போடு துல்லியமாகப் பொருந்துவதைக் கண்டனர். கருமுளை தொடர்பு கொண்டுள்ள அதன் தாயின் நெஞ்சகத் துடிப்போடு ஒத்த ஒரு புதிய மொழியை இப்படித்தான் முதன்முதலாக உருவாக்கியதாக மர். பிரெண்டுலோகன் கூறுகிறார். இதில் உள்ள ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், இந்தத் தூண்டல்களை மணிக்கு மணி நாளுக்கு நாள் ஒரு நிலைப்பாட்டுடன் வேகமாக இயங்கும்படி அமைத்துள்ளதுதான். ஒலித் தூண்டியை உருவாக்கும் பொழுது அதிக நெறிமுறைத் தரஅளவுக் கட்டுப்பாட்டை அவர்கள் மேற்கொண்டனர். இதில் கருமுளையை வந்தடையும் ஒலி, தாயின் கொப்பூழ்க் கொடியைக் கடக்கும் அரத்தத் துடிப்பொலியைவிட மிகக் குறைவாகவே பேணப்படுகிறது.

இந்தக் கருவியில் 16 வெவ்வேறு நிகழ்ச்சி முறைகள் உள்ளன. நொடிக்கு ஒரு சுற்றுத்(Cycle)தகவீட்டில் தாயின் நெஞ்சகத் துடிப்புக்கு ஏற்றவாறு முதல் நிகழ்ச்சி முறையில் ஒலியளவு துல்லியமாக இருக்கும். இரண்டாம் நிகழ்ச்சி முறை 1.25 சுற்றுக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட .25 சுற்று அதிகரிப்போடு நொடிக்கு 5 சுற்றுகள் வரை உயர்ந்து செல்லும். தாயின் பேறுகால முதிர்ச்சிக்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு கிழமையும் ஒலியின் வேகம் அதிகரிக்கப் படும். இந்த ஒலிமுறைக்குக் கருமுளை ஆட்படுகிறது.

இப்படிப்பட்ட பாடத் திட்டங் கொண்ட உள் கருப்பை ஒழுங்கொலிப்(Rhythm)பதிப்புதான் (Imprint) பிறந்தபின் குழந்தை கற்கப் போகும் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. ஒலித்தூண்டியின் அடிப்படை அமைப்பு முதிர் கருவின் மூளையில் உள்ள நரம்பு இணைப்புகளை வலுப்படுத்துகிறது. ஒலிகளின் நிகழ்ச்சி முறை வேறுபாடுகளால் நரம்பணுக்கள் அதிகப் பயிற்சி பெறுகின்றன. மூளையில் நரம்பணுக்கள் இடையில் கூட்டு இடங்களின் (Synoptics) எண்ணிக்கையை இது அதிகரிக்கிறது. அதனால் ஒரு நூற்று விழுக்காட்டு நரம்பணுக்களை பிறக்குமுன் அழியாமல் காக்கிறது.

இதன் விளைவாக மாந்தவள ஆற்றலுக்கும், மிகுந்த உள் நலத்திற்கும் பெரிதும் உகந்த மூளை, பிறக்கும் குழந்தைகளுக்கு அமைகிறது. கருமுளையின் மூளை தான் விளங்கிக் கொள்ளாதவற்றைத் தானே தவிர்த்துவிடுவதால் இதில் அதிகத் தூண்டல் பற்றிய அச்சம் கொள்ளத் தேவையில்லை. "அதிகத் தூண்டல் ஒரு சிக்கலாக இருக்கும் என்றால், அன்றாடம் 24 மணி நேரமும் தாயின் அரத்தத் துடிப்பு கொப்பூழ்க் கொடியைக் கடந்தபின் பேரொலியோடு 65 ஒலிச் செறிவளவுக்கு அதிகமாகத் தொடர்வதால் ஒவ்வொரு

படிப்பகம்

www.padippakam.com



குழந்தையும் தொல்லைப்பட நேருமே" என்கிறார் மர். பிரெண்டு லோகன்.

ஆனால், இந்தக் கருவி வெளியிடும் ஒலி இயற்கை ஒலியின் உச்ச வரம்பைவிட மிகவும் குறைவாகவே உள்ளது. தாயாகப் போகின்றவர் கருவுற்றிருக்கும்பொழுது எந்த நிலையிலும் 'ஒலித் தூண்டி'யைப் பயன்படுத்தத் தொடங்கலாம். ஓர் அகவியைவிடச் (Pager) சற்றுப் பெரியதாகத் தோன்றும் இந்தக் கருவியை இடுப்பு வார்ப்பட்டையில் (Belt) பொருத்திக் கொண்டு காலையில் ஒரு மணிநேரமும், மாலையில் ஒருமணி நேரமும் அன்றாடம் அதே நேரத்தில் பயன்படுத்துதல் வேண்டும். 'ஒலித் தூண்டி' இயங்கும் போது தாய்மார்கள் தங்கள் இயல்பான அன்றாடப் பணிகளைச் செய்யலாம்.

அமெரிக்காவில் தூண்டலுக்கு உட்பட்ட முதல் குழந்தைக்கு இப்பொழுது ஒன்பது அகவை ஆகிறது. கருப்பையில் இருந்தபோது 'ஒலித் தூண்டி'யால் தூண்டப் பெற்ற குழந்தைகளின் பெற்றோர், தாங்கள் பெற்ற குழந்தைகள் தணிவு, அமைதி, எச்சரிக்கை, உடல் நலம், எப்பொழுதேனும் அழும் தன்மை, ஆகியவற்றுடன் இருப்ப தாகக் கூறுகின்றனர். அவை குறிப்பிடத் தக்க வகையில் விழிப் புணர்வோடும், வியப்பார்வத்தோடும் உள்ளன. அவை உரிய காலத் திற்கு முன்பே இயல்புக்கு மீறிய வலிவோடு தவழ்ந்தும், நடந்தும், பிறகு வலிவோடும் பொலிவோடும் உடல் உறுப்புகள் ஒத்தியையும் தன்மையோடும் விளங்கினவாம். இந்தக் குழந்தைகள் வளர்ந்த பிறகு தனித் தன்மை, அதிக முயற்சி, செயலுறுதி, கூடிப் பழகுதல், படைப் பாற்றல் ஆகியவற்றோடு நல்ல கூரியநோக்கையும் நினைவாற்றலை யும் கொண்டிருந்தனவாம். அவற்றின் சொல்நலம் கொண்ட மொழித் திறமைகள் ஒலித் தூண்டலுக்கு உட்படாத அவற்றை ஒத்த மற்றக் குழந்தைகளை (Counter–Parts) விஞ்சி இருந்தன என்றும் அவர் கூறுகிறார்.

உருசிய மருத்துவர் மைக்கேல் இலாசரேவ், இதை ஒத்த ஆய்வு ஒன்றை மேற்கொண்டிருந்தார். அதில் ஒரே வேறுபாடு என்னவென் றால், கருமுளையைத் தூண்ட அவர் இசையைப் பயன்படுத்தினார் என்பதே. பிறப்புக்கு முன்னும் பின்னும் ஒரு குழந்தையின் உள வளர்ச்சியை ஊக்குவிக்க அவர் 14 நாடாப் பதிவு இசையைப் பயன்படுத்தினார்.

உடலும் உள்ளமும் சேர்ந்து இயங்கும் உகந்த சூழலுக்கு வாய்ப்பாகத் தன்னியக்கம் (Reflex) அமைவதில் ஒலி பெரும்பங்கு ஆற்றுகிறது என அவர் நம்புகிறார். இசையின் பயனால் விளையும்

படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தூண்டல், அதிர்வு, உடலியல், மனவியல் ஆகியவற்றின் துணைக் கூறுகள் அடிப்படையில் அமைந்துள்ளதால் தொடக்க நிலைக் கருப்பை மலர்ச்சியில் (Evolution) பங்கு கொள்வதுடன் குழந்தையின் படிப்படியான முதிர்ச்சியைத் தூண்டுகின்றது என்பதை நிறுவினார். 1984-இலும் 85-இலும் உருசியாவில் 200க்கும் மேற்பட்ட கருவுற்ற பெண்கள் இந்த அணுகுமுறையை மேற்கொண்டனர். அவர்கட்குப் பிறந்த குழந்தைகள் எல்லாவகை வளர்ச்சியிலும் முன்னேற்றம் கொண்டிருந்தன. 1980-இலிருந்து மர். இலாசரேவ் அமெரிக்காவில் முற்பேறுகாலத் தூண்டல் ஆய்வை நிகழ்த்தினார்.

கருவுற்ற தாய்மார்களின் மூன்று குழுக்களை மா. இலாசரேவ் நெறிமுறை ஆய்வுக்கு உட்படுத்தினர். முதல் குழுவினர் தங்கள் குழந்தைகளுக்கு ஒழுங்கு முறையோடு இசையை ஒலிக்கச் செய்து தூண்டல் அளித்தனர். இரண்டாம் குழுவினர் மர். பிரெண்டு லோகன் முறையைப் பயன்படுத்தி ஒலித் தூண்டல் செய்தனர். மூன்றாம் குழுவினர் சிலர் ஒழுங்கு முறையின்றி இசையை ஒலிக்கச் செய்த போதிலும் வேண்டுமென்றே தூண்டல் அளிக்காமல் தவிர்த்தனர். அவர் மர். பிரெண்டு லோகனின் நெஞ்சகப் பாடத் திட்டமும், தம் இசை நிகழ்ச்சித் திட்டமும் குழந்தை பிறப்பின் போது அதிகத் தொல்லையின்றிப் பிறந்தது என்பது மட்டுமின்றி மர். பிரெண்டுலோகனுடைய முறை அதிகப் பயனுள்ளதாக இருந்ததையும், குழந்தையின் வளர்ச்சியை விரைவுபடுத்தியதையும் கண்டார். மர். இலாசரேவ் தாம் கண்டுபிடித்துள்ள சிக்கல் வாய்ந்த செயல் திட்டமும், செயல் திறமும் கொண்ட மூச்சு இசைக் கருவியால் (Breathing–Music–Theraphy) குழந்தைகளின் மூச்சுக் குழல் ஈளை .நோயில் இருந்து அவர்களைக் குணப்படுத்தி மறுவாழ்வு அளிக்க முடியும் என்கிறார்.

அமெரிக்காவிலும் உருசியாவிலும் இந்த அணுகுமுறையை 1989இல் இருந்து மக்களில் சிலர் கடைப்பிடித்து வருகின்றனர். தனிப்பட்ட ஆராய்வாளர்களின் மதிப்பீடுகள் முதன்முதலாகக் கண்டறிந்த முடிவுகளோடு ஒத்துள்ளன என்று அவர்கள் கூறுகின்றனர். இது எவ்வகை எதிர்விளைவுகளையும் காட்ட வில்லை. மிக அண்மையில் மேற்கொண்ட தூண்டல் அதிர்வுகளால் கொப்பூழ்க் கொடிச் சுவர்கள் தடித்தலும், கருமுளை கருப்பையுள் அசைவதால் செயலெதிர்ச் செயல் (Interaction) நிகழ்வதும் தெரிய வந்துள்ளன. எனவே 'ஒலித் தூண்டி' பிறப்புக்கு முன்பே விளையாட்டுக் கல்வி (Kinder Garden) வகுப்புகள் வரப்போகும் காலத்தை முன்னறிவிக்கிறது.

○

படிப்பகம்

www.padippakam.com

## மக்களே :

# இந்தியா சமயச் சார்பற்ற நாடா?

ஐயா,

இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடு என்பது அரசியற் சட்டத்தில் தொடக்கத்திலேயே காட்டப்பட்டுள்ளது. அரசியற் கட்சிகள் யாவும் அதனை எடுத்துக் கூறிக் கூறி மக்களின் மனத்தில் அத்தகைய எண்ணத்தையே பதிய வைத்துள்ளன. ஆனால், இந்தியாவில் ஆளுகின்ற கட்சிகள் யாவும் சமயத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்தியா பல சமயங்களையும் அவற்றைப் பின்பற்றும் மக்களையும் கொண்டதாக இருப்பினும் இந்து சமயம் என்ற ஒரு குழப்படியான சமயத்தையே வளர்க்க இந்திய அரசு முயன்று கொண்டிருக்கிறது. அதற்காகப் பிற சமயத்தாரைத் துணிந்து தாக்குவது, அவர்களுடைய தொழுகை இடத்தை நொறுக்குவது போன்ற வெறியாட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்து சமயம் மட்டுமே இந்தியாவில் இருக்க வேண்டும். அது தவிர்த்து மற்றைய சமயங்கள் இருத்தல் கூடாது. அவற்றை அழிக்க வேண்டும் என இந்தியாவை ஆளும் இந்து சமயத்தினர் எண்ணிச் செயல்படுகின்றனர்.

பாரதிய சனதாவில் உள்ள தலைவர்களும் ஆர்.எசு.எசு., இந்து முன்னணி, இந்து பரிசத்து, சிவசேனை போன்ற இந்து சமய இயக்கங்களைச் சேர்ந்தோரும் ஒன்றிணைந்து அயோத்தியில், வரலாற்றுச் சின்னமான பாபர் மண்டபத்தைத் தரைமட்டமாக்கி மகிழ்ந்தனர். இவர்கள் போடும் போலிக் கூச்சல் என்ன? நாம் எல்லோரும் ஒன்றே. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று மூச்சுத் திணறக் கத்துகிறார்கள். இங்கு வாழும் பலவகையான சமயங்களைப் பின்பற்றும் மக்களை இந்து மதத்தினர் பகையுணர்ச்சியோடு பார்க்கும்படித் தூண்டிவிடுகின்றனர். அதனால் நாட்டில் கலகங்கள் நடைபெறுகின்றன. கொலைகள், கொள்ளைகள், குண்டு வெடிப்புகள் நடைபெறுகின்றன. மும்பையில் நடந்த தொடர் குண்டுவெடிப்புக

படிப்பகம்

www.padippakam.com



ளுக்கும், பாபர் மண்டப இடிப்புத் தொடர்பான கலவரங்களுக்கும், சிவசேனைத் தலைவர் பால்தாக்கரே காரணியம் என அந்நிகழ்ச்சிகளை ஆய்வு செய்ய அமர்த்தப்பட்ட நடுவர் கிருட்டிணா குழு குற்றம் சாட்டியுள்ளது.

இந்து சமய அமைப்புகளில் பார்ப்பனர்களே பொறுப்புகளில் உள்ளனர். அவர்கள்தான் ஏனைய சமயங்களைத் தாக்குவதில் மும்முரமாகச் செயல்படுகின்றனர். பார்ப்பனர் அல்லாதாரையும் நாம் எல்லோரும் இந்துக்கள் எனக் கூறித் தூண்டிவிடுகின்றனர்.

இந்தியாவில் உள்ள மற்ற சமயத்தினர் யாவரும் இந்தியர்களே. வெளிநாட்டிலிருந்து வந்தவர்களல்லர். இந்து சமயத்தின் சாதிக் கொடுமை, மற்றும் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் சமயம் மாறியவர்கள் [illegible] உடன்பிறப்புகளைப் போல ஏற்றத்தாழ்வு [illegible] இந்தி ஒற்றுமைக்கு [illegible] இந்தப் பார்ப்பன அமைப்புகளே. இவர்கள் இந்துசமய நூல்களில் உள்ள மூடக் கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் மக்களிடம் பரப்பி வருகின்றனர். இந்த அமைப்புகள் மக்களை [illegible] செய்து வருகின்றன. அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்திலேயும் பார்ப்பனர்கள் காட்டு விலங்காண்டிகள் வாழ்ந்த [illegible] வேள்விகளை நடத்தி உணவும் பொருள்களைத் தீயில் போட்டு வீணாக்கி ஆட்டம் போடுகிறார்கள். அரசும் இவ்வகை முட்டாள்தனமான செயல்களைத் தடுக்காதது மட்டுமன்றிப் பாதுகாப்பும் கொடுத்து வருகின்றது. மக்கள் முட்டாள்களாக இருத்தல் வேண்டும் என்பதுதானே ஆட்சியாளர்களின் எண்ணம்!

சமயச் சார்பற்ற நாடு என்று இந்தியாவைக் கூறிக்கொண்டு [illegible] விடுமுறைகளை அறிவித்து அரசு அலுவலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் அவற்றை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது. இன்னும் ஒரு வேடிக்கை என்னவென்றால் அரசு விடுமுறை என்ற பட்டியலில் இடம் பெற்றுள்ள மொத்தம் இருபத்து மூன்று நாள்களில் முகமதியர்களுக்கு நான்கு நாள்களும் கிறித்துவர்களுக்கு இரண்டு நாள்களும் இந்துக்களுக்கு ஆறு நாள்களும் பிற சமயத்தவர்களுக்கு ஒரே ஒரு நாளும் ஆக மொத்தம் எல்லாச் சமயங்களுக்குமாகப் பதின்மூன்று நாள்கள் விடுமுறையாக விடப்படுகின்றன. அதிலேயும் இந்துக்களுக்கு அதிக நாள்கள் (ஆறு நாள்கள்) விடுமுறை நாள்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதனை

[illegible]

படிப்பகம்

www.padippakam.com



ஆராயும்போது இந்தியா ஒரு சமயச்சார்பற்ற நாடு என எப்படிக் கூறமுடியும்? எனவே இந்துக்கள் நாடு இந்தியா என்றே கூறமுடியும்.

பொதுவாக எல்லாச் சமயங்களுமே பெரும்பாலும் மூடப் பழக்கவழக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. அறிவியலுக்கு ஒத்து வராதவை. இந்து சமயமோ வன்முறைகளைத் தூண்டி மற்றச் சமயத்தினரை அழித்து ஒழிக்கும். கொலைக் கும்பல்களைத்தன் அகத்தே வைத்திருக்கும் சமயமாக உள்ளது. சாதி வேற்றுமைகளை விடாப்பிடியாக வைத்துக் கொண்டு மக்களை வேற்றுமை உணர்வோடு வாழ வைக்கும் கொடுமையான சமயம்.

அதனாலேயே பாவலரேறு அவர்கள், 'தமிழர்கள் ஒட்டு மொத்தமாக இந்து சமயத்திலிருந்து வெளியேற வேண்டும்' எனக் கூறினார்கள். மேலும் ஐயா அவர்கள் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

"இந்தியா ஒன்றாக இருக்கும்வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்கவேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவேமுடியாது. மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாத வரை ஆரியப் பார்ப்பனரின் வஞ்சத்திலிருந்தும் மேலாளுமை யினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை தமிழ் மொழி தூய்மை யுறாது; தமிழினம் தலை தூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்துமதத்தினின்றும் மதப் பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால் நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே ஆகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம் முழு மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்" எனக் கூறுகிறார்.

இந்திய அரசை நடத்திச் செல்லும் பார்ப்பனிய ஆளுமை வலிவு, தமிழர்களுக்கு எவ்வகை நன்மையையும் செய்யாது; எதிர் பார்க்கவும் வேண்டாம். பாவலரேறு அவர்களின் கூற்றுப்படி தமிழர்கள் நடையிடுதலே சாலச் சிறந்தது.

நெல்லை அதியமான், தாளமுத்து

www.padippakam.com

# பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

## ஈரோடை - 26.7.98

(உரைச் சுருக்கங்கள்)

**திரு. 'குறிஞ்சி' சண்முகசுந்தரம்** (வரவேற்புரை)

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மொழி, இன மேம்பாட்டிற்குத் தமிழர் அனைவரையும் ஒன்று சேர்ப்பதற்காக அமையவேண்டும். அவ்வகையில் நாம் செயல் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. இறைக்குருவனார்** (தலைமையுரை)

தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு என்னும் முந்நிலைகளிலும் மேம்பாடு காண்பதையே பாவலரேறு ஐயா அவர்கள் தம் வாழ்நாட் பணியாக மேற்கொண்டார்கள்.

*எப்படி யேனும் இத்தமி ழகத்தை*
*முப்படி யுயர்த்திடல் வேண்டும் — என்*
*மூச்சதற் குதவிடல் வேண்டும்!*

என்பது அவரது விழைவு. இன்னல்கள் இடையூறுகள் பலவற்றுக் கிடையிலும் அவர் எத்தனையோ நன்முயற்சிகளை இடைவிடாது செய்துவந்தார்; போராட்டங்களில் முனைப்போடு ஈடுபட்டார். அவர் தொடங்கிய பணிகளை நாம் தொடரவேண்டியது நம் முன்னுள்ள கட்டாயக் கடமையாக மட்டுமன்றி, இன்றைய சூழலில் இன்றியமையாத் தேவையாகவும் உள்ளது.

தமிழ், தமிழ்நாட்டின் ஆட்சிமொழியாகவும் பயிற்றுமொழி யாகவும் சட்டம் இயற்றப்பெற்று நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகியுங் கூட, அவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரும் போராட்டங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. ஆனால், தமிழ்த் தொடர்பான அரசின் செயற்பாடுகளோ வேறுவகையில் தமிழுணர் வாளர்களைத் திசைதிருப்பும் போக்கில் நடைபெறுகின்றன.

சாதிச் செருக்கேறிய வன்கண்மை படைத்த ஆளுமையாளர்கள் சாதியின் பெயரால் காலங் காலமாக அடக்கியொடுக்கப்பட்டுக் கிடந்தவர்கள் தலையெடுக்க வொட்டாமல் செய்யும் அழிம்புகள் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன.

மதத்தினை ஒரு பெருங்கருவியாகக் கைக்கொண்டு இனப்

படிப்பகம்

www.padippakam.com



பகைவர்களும் அவர்தம் கைக்கூலிகளுமான மதக் கயவர்கள் நிகழ்த்துங் கொடும்பாடுகள் இன்றைய நிலையிலுங் கொஞ்சமல்ல.

தமிழீழத்தில் தமிழ்விடலைகள் களத்தில் நின்று நிகழ்த்துகின்ற வியத்தகு வீரச்செயல்கள் நமக்குப் பெருமையளிப்பனவாக இருப்பினும் அங்குள்ள தமிழ்மக்கள் தாய்நாட்டிலேயே ஏதிலிகளாகவும் இரந்து உயிர்வாழும் அவலநிலைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியவில்லை.

தொழில் வளர்ச்சி, தாராளமயக் கொள்கை என்ற பெயரில் – அயல்நாட்டு முதலீடு என்னுங் கவர்ச்சித் திட்டத்தில் உள்நாட்டுத் தொழில்களின் ஆணிவேர் அறுக்கப்படுகின்ற கொடுமை மும்முரமாகச் செயற்படுத்தப்படுகின்றது. தமிழர்களெல்லாம் நிலையான கூலிகள்ாக ஆணியடிக்கப்படுகிறார்கள். தமிழர்களின் நிறுவனங்கள் சிலவும் தரகுக் கூலியையே பெருவருவாயாகக் கொள்ளும் இழி நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

இவற்றை யெல்லாம் எண்ணிப் பார்த்து நாம் முனைந்து செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**திரு. செ. நா. குப்பமுத்து ஐயா**

பாவலர் இரா. வடிவேலனார் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றதறிந்து மிகவும் மகிழ்ந்தேன். எனக்கு நீண்ட காலம் தொடர்பு உள்ளவர். அமெரிக்க ஆராய்ச்சிக் கழகமும் இவர் பாவன்மையைப் பாராட்டி இருக்கிறது. இவர் எழுதிய 'வெற்றி உன் கையில்' நூல் தன்னம்பிக்கை ஊட்டக் கூடியது. பாவலரேறு விழா மொழிப் பற்று, நாட்டுப் பற்று உணர்வை எழுப்பக் கூடியது.

**திரு. மா.செ. தமிழ்மணி** (உ.த.மு.க.)

பாவலரேறு நினைவேந்தல் நிகழ்ச்சி திரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சி! விழா அன்று!

இத்திங்கள் தென்மொழி இதழில் இறைக்குருவனார் உணர்ச்சி மிக்க ஆசிரியவுரை பாவலரேறு அவர்களைப் போல் எழுதியுள்ளதை அறிகிறேன். தமிழிய மீட்சிக்காகப் பாடுபட்ட பாவலரேறு ஐயா அவர்கள் தம் கொள்கை வழித் தம் குடும்பத்தையே நடத்திச் சென்றார். தமிழால் பொருள் ஈட்டுபவர்கள் நிரம்ப உண்டு. அவர் தமிழுக்காக, தமிழர்க்காக வாழ்ந்தார். பாவலரேறு ஐயா அவர்கள் எப்படிச் செயல்பட்டார்? எப்படி உண்டார், உயிர்த்தார்? நினைத்தால் வியப்பிற்கு மேல் வியப்பு ஏற்படும்!

நகர்ப்புறங்களை விடச் சிற்றூர்ப்புறங்களில் பாட்டாளி மக்களைத் திரட்ட வேண்டும். ஐயா அவர்களின் கொள்கைகள்

படிப்பகம்

www.padippakam.com



நகர்ப்புறங்களில் மட்டுமன்றிச் சிற்றூர்ப் புறங்களிலும் பரவ வேண்டும். நாம் பாட்டாளி மக்களையும் திரட்ட வேண்டும்!

திரு. வேலிறையன் (தமிழர் கொற்றம்)

இந்திய விடுதலை இயக்கம், பெரியாரின் பகுத்தறிவு இயக்கம், குமுகாய மாற்றத்திற்கான அழித்தொழிப்பு(நச்சல்பாரி) இயக்கம் ஆகியவற்றோடு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தனித் தமிழியக்கமும் குறிப்பிடத்தக்க ஒன்று.

முதலில் பொதுவுடைமை இயக்கத்தவர்கள் தமிழ்த் தேசியச் சிந்தனையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் பார்வை ஓரிந்தியாவாகவே இருந்தது. பாவலர் தணிகைச் செல்வன் முதலிய பலர் அதிலிருந்து தமிழ்த் தேசியத்துக்கு மாறியுள்ளனர். திரு. பழ. நடவரசனும் தென்மொழியிலிருந்து பொதுவுடைமை இயக்கத்திற்குச் சென்று வந்தவரே.

இந்தியா, இந்தி, இந்துப் பார்ப்பன மார்வாடி பனியாக்களே நாம் எதிர்த்துப் போராட வேண்டிய எதிரிகள்.

இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன், பாவலரேறு ஆகியவர்களைப் பற்றிப் பேசுகிறோம். பாரதியார், பாரதிதாசன் ஆகிய இருவரையும்விடப் பாவலரேறு அவர்கள் களப்பணி கண்டவர். உ.த.மு.க என்னும் இயக்கம் கண்டவர்.

சாதி ஒழிப்பு, தமிழின உணர்வால் தமிழியத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும்.

திரு. 'பாவேந்தர்' இராமலிங்கம் (பாவேந்தர் மன்றம்)

பாவலரேறு ஐயா அவர்களுடன் இருபத்தைந்து ஆண்டுகள் நெருங்கிய தொடர்பு கொண்டவன் நான். இந்த மாதத் 'தென்மொழி' இதழில் ஐயாவே நேரில் பேசுவது போன்ற ஆசிரிய உரை அமைந்துள்ளது. இவரின் வழி நமக்குச் செயலாக்கமும், ஊக்கமும் வேண்டும்.

தமிழ்நாட்டுப் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலப் பள்ளிகளில் படிக்க வைப்பதால் இங்கிலாந்தில் வேலை கிடைத்து விடும் என்று நினைக்கின்றனர். தமிழ்வழிப் பள்ளிக்காக ஊர்தொறும் கிளர்ச்சியில் வேண்டும். பாவலரேறு அவர்கள், ஒருமுறை, 'தம்பி! (உயர்ந்த) கொள்கைகளின் பின்னால் வருவதற்கு ஆளில்லையே!' என்று கூறி வருந்தினார்.

பாரதி 'மாகாளி, பராசத்தி கடைக்கண் வைத்தாள்' என்றால் நம்புகிறான். பாவலரேறு 'காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை' என்றால் நம்ப மறுக்கிறான்.

www.padippakam.com



இந்தியாவில் இருக்கும்வரை தமிழ்நாடு முன்னேறாது. மார்வாடிகளால், மலையாளிகளால் தமிழ்நாடு பறிபோகிறது.

'திராவிடம்' நம்மை நாமே ஏமாற்றும் சொல். மொழியால், இனத்தால், நாட்டால், பண்பாட்டால் நாம் தமிழர்கள்! மற்ற வெங்காயமெல்லாம் வேண்டாம்.

**திரு. தி.அ. சண்முகசுந்தரம்** (திருக்குறள் பேரவை)

1985-ஆம் ஆண்டு ஈரோட்டில் நடந்த திருக்குறள் பேரவையின் மாநில மாநாட்டில் பேரா. அன்பழகனார், திரு. வீரமணி, திரு. பாவலரேறு ஆகியோர் கலந்து கொண்டனர். ஏழு எட்டு ஆண்டுகளுக்கு முன் பவானியில் என்னுடைய தலைமையில் திருக்குறள் தொடர் பொழிவு - பாவலரேறு அவர்கள் அரசியல் பகுதிபற்றிப் பேசினார்கள்.

பார்ப்பனர்கள் சூழ்ச்சிமிக்கவர்கள். பாவேந்தரின் 'தமிழியக்கம்' கல்லூரிகளில் பாடமாக வைக்க எதிர்ப்புத் தெரிவித்தவர்கள். பார்ப்பான் பால்........ என்ற பாவேந்தரின் பாடலே அதற்குக் காரணியம்!

'முரசொலி' ஏட்டை நிறுத்துவதாக அறிவித்தபோது, பாவலரேறு ஐயா அவர்கள், கலைஞரின் இருப்பிடம் சென்று வேண்டிக் கொண்டபடி கலைஞர் மறுநாள் 'முரசொலி' நிறுத்தப்படாது என்று அறிவிப்புக் கொடுத்தார். பாவேந்தரோடு பாவலரேறுவை ஒப்பீடு செய்து பேசக் கூடாது! ஏனென்றால் அவர் இவர் ஆசான்!

இங்குப் பாவலர் காசி. ஆனந்தன் பாடலைப் பாடினார்கள். 'தமிழா நீ பேசுவது தமிழா' என்று! தமிழ் மக்கள் ஆங்கில வெறி கொண்டு அலைகிறார்கள். 'தமிழ்நாட்டுத் தெருக்களில் தமிழ்தான் இல்லை' பள்ளிகளில் தமிழ் இல்லை. தணிப்பரிதாம் துன்பமிது!

**திரு. கி.வே. தமிழ்நாடன்** (த.நா.மா.இலெ. கட்சி)

இந்நாள் 'தமிழ்த் தேசியத் தந்தை'யின் நினைவுநாள்! அறிஞர் கால்டுவெல், பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், பாவலரேறு ஐயா போன்றோர் மண்ணின் வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுக்க வந்தவர்கள். பாவலரேறு இந்தியாவை, இந்துவியத்தை, இந்தியை எதிர்த்தார். தமிழ்த் தேசிய எழுச்சியே அவர் உழைப்பு! முயற்சி!

பொதுவுடைமை இயக்கத்தினர் தாய் மொழியைப் போற்றவில்லை. இலெனின் சொன்ன தேசிய எழுச்சிகளை ஆதரிக்கவில்லை! அண்மையில் பெரிய அரசியல் மாற்றம் ஏற்பட்டது. தமிழர்கள் நடுவண் அரசில் பங்கேற்றபோதும் நம் தேசிய நலன்கள், போற்றிப் பாதுகாக்கப்படவில்லை. இன்றும் பாரதிய சனதா

படிப்பகம்

www.padippakam.com



அப்பட்டமான பார்ப்பனிய ஆட்சி! ஐந்து குண்டுகள் வெடித்தது எதற்கு? நம்மை யெல்லாம் அச்சுறுத்த!

தமிழக அரசு தட்டிக் கேட்காது. 356-ஆவது பிரிவால் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். காவிரி, பெரியாறு சிக்கல் தமிழ் வழிக் கல்வி முதலானவற்றுள் எதிலும் இன்று செயல்பாடின்மையைத் தெளிவாகக் காண்கிறோம்.

இன்று அரசு புதிய அடக்குமுறைச் சட்டம் (பொடா) கொண்டு வந்துள்ளது. எதற்கு? எதிர்வரும் போராட்டக்காரர்களை அடக்க! இருக்கும் சட்டம் போதாதா? இவர்களே இச்சட்டத்தில் எதிர் வரும் நாள்களில் மாட்டப் போகிறார்கள், பாருங்கள்!

தமிழ் நாட்டில் தமிழ்த் தேசியம் கட்டமைக்கப்பட வேண்டும். முழு இறையாண்மை உள்ள தமிழக அரசு முகிழ்க்க வேண்டும். அதற்குரிய படையினைக் கட்டமைக்க வேண்டும். மெய்யியல் போராட்டம் நிகழ்த்தப்பட வேண்டும்.

**புலவர் க. முருகேசனார்** (தமிழாசிரியர் கழகம்)

நாம் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் மூத்த பழங் குடிகள். பழங்குடிகளின் உரிமைகளைப் பறிப்பது உலக வரலாறு. தமிழ், தமிழினம் என்று சொன்னாலே வேறுபட்ட பார்வை! இங்கு பிற மாநிலத்தவர் வணிகத்திலும் தொழிலிலும் மேலாளுமை!

தமிழகத்துத் தமிழர்களிடத்தில் தன்மானம் இல்லை. இவன் வயிற்றுப்பாட்டிற்கே நாயாய் அலைகின்றான். இருப்பவன், மாற்றுக் கூட்டத்தோடு சேர்ந்து நம்மையே எதிர்க்கிறான். கல்வித் துறையில் உயிரே இல்லை. நம் பிள்ளைகள் ஆங்கிலவழிப் பள்ளிகளில்! தன் தாய்மொழியை மறந்த ஓர் இனம் முன்னேறாது! அடிமையாகவே இருக்கும்!

**புலவர் சோ. கா. அறிவுடைநம்பி** (உ.த.மு.க.)

நாடு நாடாக இல்லை. ஆரியம் நாடு முழுதும் காடு போல் மண்டிக் கிடக்கிறது. ஒருபெரும் எழுச்சி தோன்றினாலன்றி நம் இனத்திற்கு விடிவே இல்லை. எல்லாத் துறைகளிலும் தமிழன் தாழ்த்தப்படுகிறான். பிற மாநிலத்தவர்களும் தமிழர்களை மிதிக் கின்றனர். இவன் பிள்ளைப் பூச்சியாக ஆகிவிட்டான். பாவலரேறு ஐயா அவர்களின் கொள்கை உரத்தை நாம் நெஞ்சில் நிறுத்த வேண்டும். புதிய விடியலுக்கு வழிவகை காண வேண்டும்!

**பாவலர் த. கோவேந்தன்**

புதுவையில் திரு. இலெனின் தங்கப்பா அறிமுகமானார். சிறந்த அறிஞர், பாவலர். அதற்குப்பின் துரை. மாணிக்கம் என்னும் நம்

படிப்பகம்

www.padippakam.com



பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் அறிமுகமானார். அவர் தாமே தம்மை எல்லா வகையிலும் உயர்த்திக் கொண்டவர்.

பெருஞ்சித்திரனார் அவர்களுக்குத் தம் குடும்பம் பற்றிய சிந்தனை என்றும் இருந்ததில்லை. அவர் என்றும் மொழி, இனம், நாடு பற்றியே சிந்தித்தார். நானும் நண்பர்களும் குடும்ப நலத்தைக் கருதினோம்.

என் பதின்மூன்றாம் அகவையில் தன்மான இயக்கத்தில் சேர்ந்தேன். இதற்கு என் தந்தையார் காரணம். பிறகு பொது வுடைமை இயக்கத்திற்குச் சென்றேன் இரசூல் கம்சதோவ் அவார் மொழியில், "அவார் மொழி நாளை அழியும் என்றால், இன்றே நான் மடிவேன்" என்று கூறியதை மொழி பெயர்த்து வெளி யிட்டேன். அதைப் பொதுவுடைமைத் தோழர்கள் விரும்பவில்லை. என்னை வெளியேற்ற நினைத்தார்கள். நானே வந்துவிட்டேன்.

பெரியாருக்குப் பின் பாவலரேறு உறுதியாகச் செயல்பட்டார். பெரியார் 'திராவிடர் கழகம்' என்று பெயர் வைத்தபோது அண்ணல் தங்கோ, கி.ஆ.பெ.விசுவநாதம், என் தந்தையார் முதலா னோர் 'தமிழர் கழகம்' என்று வைப்போம் என்றதைப் பெரியார் ஏற்கவில்லை. திராவிடர் என்றால் ஆரியர் அல்லாதவர் என்று விளக்கம் கூறினார்.

தமிழர் படை திரட்டப் படவேண்டும். அண்ணல் தங்கோ அன்றே 'தமிழ் நிலம்' ஏடு தொடங்கினார். தமிழகம் தனியாகப் பிரியாவிட்டால் எதிர்காலத்தில் தமிழர்களுக்கு வாழ்வில்லை. தமிழ்ப் பண்பாடு, தமிழர் வாழ்வு தழைக்க இத்தமிழ்நாடு விடுதலை நோக்கிச் செல்ல வேண்டும்.

இனி, என் பணியான பாவலர் திரு. இரா. வடிவேலனாரின் 'வெற்றி உன் கையில்' நூலை வெளியிடுகிறேன். பாவலரேறு அவர்களுக்கும் இந்நூலிற்கும் ஒரு தொடர்பு உண்டு. அறிஞர் எமர்சன் எழுதிய Self-Reliance என்னும் ஆங்கில நூலை பாவலரேறு தமிழில் மொழிபெயர்த்துள்ளார். 'தன்னுணர்வு' என்னும் அந்நூலைப் போலத் தன்னம்பிக்கையை ஊட்டக் கூடிய நூல் இது! வேர்ட்சு வொர்த்தின் 'தன்னம்பிக்கை'யின் வெளிப் பாடாக உள்ளது! இதில் கழக இலக்கியம் முதல் பாரதிதாசன் வரை, செல்லி முதல் கலில் கிபுரான் வரை மேற்கோள் காட்டி யுள்ளார்.

புலவர் இரா. வடிவேலனார்க்கு முனைவர் பட்டத்தையும் அளிக்கிறேன். இவர்தம் ஐந்து பாடல் தொகுப்புகளிலிருந்து முப்பது பாடல்கள் மொழி பெயர்க்கப்பட்டு கலிபோர்னியா (அமெரிக்கா)

படிப்பகம்

கலை – பண்பாட்டுக் கழகத்திற்கு அனுப்பப்பட்டு சிறப்புத் தகுதியுடன் கிடைக்கப் பெற்றது. இந்தியா, தமிழகத்தில் படைப்பிலக்கியத்திற்கு இதுபோல் பட்டங்கள் தரப்படுவதில்லை. முனைவர் பட்டம் பெற்ற புலவர் வடிவேலனாரைப் பாராட்டுகிறேன்.

**சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார்**

இங்கு முனைவர் இரா. வடிவேலனாரின் நூல் 'வெற்றி உன் கையில்' வெளியிடப்பட்டது. தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு தம் பங்களிப்பைச் செய்தமைக்காக 'முனைவர்' பட்டம் பெற்றுச் சிறக்கிறார். அவரை நான் வாழ்த்துகிறேன்; பாராட்டுகிறேன்.

நான் புலவர் தி.மு. அரசமாணிக்கனாருக்குப் பொன்னாடை அணிவித்துப் பாராட்டியிருக்க வேண்டும். அவர் உடல்நலம் இல்லாமல் மருத்துவமனையில் உள்ளார் என்பதை அறிந்தேன். அவர் நலம் பெறவேண்டும். நான் உணர்ந்தவாறே சொல்கிறேன். அரசமாணிக்கனார் தமிழன்பில் பெரியவர். குழந்தை மனம் படைத்தவர்.

1964ஆம் ஆண்டு பாவேந்தர் மறைந்தார். புலவர் முதுகண்ணனார், பேரா. தங்கப்பா, பாவலரேறு ஆகியோர் கண்ணம்மை அச்சகத்தில் நினைவு மலர் ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தபொழுது மலருக்கு **என்ன** தலைப்பிடுவது? என்ற சிந்தனை எழுந்தது. பலரும் பல கருத்துகளைக் கூறினர். இறுதியில் பாவலரேறுவைக் கேட்டபோது 'பாவேந்தர் நினைவேந்தல் என்ற சொல்லைத் தந்தார். இதற்கு முன் இந்தத் தொடர் யாராலும் வழங்கப்படவில்லை என்பதை இங்கு நாம் அறிய வேண்டும்.

பாவலரேறு **அவர்கள்** தாம் எழுதிய **'பாவியக் கொத்து'** நூலைப் படையலாக்கும் போது,

> 'பூப்படையல் வாடிவிடும்; பொன்படையல் மங்குமென்று
> பாப்படையல் செய்தேன் பணிந்து'

என்று எழுதுவார். அவர் பெற்றோர் மாட்டு மிகுந்த அன்பு கொண்டிருந்தவர்.

பல அறிவிலிகள்(முண்டையர்கள்) 'மம்மி', 'டாடி' என்று அழைப்பதிலே மகிழ்ச்சி காண்கின்றனர். தாய் எழில் தமிழில் 'அம்மா' 'அப்பா' எனக் குழந்தைகள் அழைப்பதில்லை.

'மம்மி' என்றால் செத்துப் போனவர்க்குரிய கல்லறை என்றும் 'டாடி' என்றால் போதை தரும் கள் என்றும் பொருள்.

ஆய் என்பது தாய் ஆகும்.

தா என்றால் தருதல். தந்தவன் (உயிர்க் கருவை) தந்தை ஆவான்.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



தா.... தா.... கொடுத்தவன் தாத்தா (மூலம்) டா....டி.

துரை. மாணிக்கம் என்ற பெயருக்குப் பின் கழகப் பாவலர் பெருஞ்சித்திரனார் பெருமையை ஓர்ந்து தாம் புனைந்து கொள்ளும் பெயராகப் 'பெருஞ்சித்திரனார்' என்பதைத் தெரிந்தெடுத்தார். 'தாம் பெற்ற பொருளை எல்லோர்க்கும் கொடு' என்பதன்றோ அந்தக் கழகப் புலவர் உள்ளம்! அது இவர்க்கும் நிறைய இருந்தது.

ஒரு சமயம், "பாவேந்தர் பாக்களைவிட உங்களுடைய பாக்கள் உணர்ச்சி மிக்கனவாக இருக்கின்றனவே! கரணியம் என்ன?" என்று வினாவிய போது, "புலமைச் செறிவு கரணியம். அவர் தந்தது எளிமையாக, மக்கள் தெரிந்து கொள்ள!" என்றார்.

ஈழத்தில் இவர் பாட்டு அவர்களுக்கு உணர்ச்சியூட்டும் மின்னாற்றல்! இவர் மறைந்தபோது, தம்பி பிரபாகரன் அழுதான். 'விடுதலை இல்லாதபோது தமிழ் ஏது?' என்பது போன்ற அவர் பாக்களில் வீரம் புதைந்து கிடக்கிறது!

அன்று சாத்தையா என்று அழைக்கப்பட்ட இன்றைய அமைச்சர் தமிழ்க்குடிமகன் – வெற்றிச்செல்வி திருமணம் நடைபெற்ற பொழுது இவர் வாழ்த்துரையில் 'அன்னை தமிழை அரசமர்த்தும் விழா!' என்றார். இன்று அது உண்மையாயிற்று; இல்லையா?

பாவலரேறுவை ஒரு சமையம் 'உங்கள் வாழ்க்கை எப்படிப் பட்டது?' என்று கேட்டபோது,

> *'அன்பிலே மழைத்தண்ணீர்*
> *அறிவிலே பெருநெருப்பு*
> *ஆற்றலில் சூறைக்காற்று'*

என்றார். பாடலாகவும் வடித்துள்ளார்.

மாந்தன் விழுவது இயல்பு. 'உடன் விசும்பென எழுந்து நில்' என்பார்.

இங்கே திருக்குறள் பேரவைத் தலைவர் அவர்கள், 'பார்ப்பான் பால் படியாதீர்... என்ற பாவேந்தர் பாடலைச் சுட்டிக் காட்டினார். பாரதிதாசன் பாரதியாரோடு பத்தாண்டுகள் பழகினும் தம் நிலையை மாற்றிக் கொள்ளவில்லை.

பாவலரேறு பலவகையான சந்தங்களைக் கையாண்டுள்ளார்.

பாரதி வெற்றி பெற்றது சித்தர், நாட்டுப் புறப்பாடல்களின் சந்தங்களை எடுத்துக் கொண்டே! 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இடைக்காடர் பாடிய 'தாந்திமிதிமி' என்ற பாடலே இவர்தம் 'தீம்திமிதிம்' பாடலுக்கும் அடிப்படை எனலாம். ○

படிப்பகம்

www.padippakam.com

# இந்துவியத்தை மட்டுமல்ல இந்தியத்தையும்தான்.......

— வினைஞன் —

வேறு எதையும்விட இந்தியாவை ஒன்றாகக் கட்டிவைக்க ஆரியப்பார்ப்பனியத்துக்கு எளிதாகப் பயன்படுவது இந்துமதம்.

(மட்டைப்பந்து) விளையாட்டு வழி — வெற்றி தோல்வியை இந்திய அளவில் காண்பதும், பண்பாட்டு விழாக்கள், நிகழ்ச்சிகள் வழி இந்திய அரசியலில் ஒற்றைத்தனத்தை ஏற்படுத்த முயல்வதும், வரலாற்று வழி இந்திய வரலாறு என ஒன்றைப் புனைவதும், பொருளியல் வழி இந்தியப் பொருளியல் என்று ஒன்றைக் காட்டுவதும், மொழி வழி இந்திய மொழி என்று ஒன்றை நிலை நிறுத்துவதும் — என்னும் இவை யாவற்றையும் விட மிக எளிதானதும், வலுவானதுமாக இந்துமதம் இந்தியாவைக் கட்டி ஆள ஆரியப் பார்ப்பனியத்திற்கு எளிதாகவே கிடைத்திருக்கிறது.

இந்துவியம் (இந்துத்துவம்) என்பது — ஏதோ இன்றைக்குத் திடுமென இந்தியத்தை ஆள எழுந்த கருத்தியல் இல்லை. ஆங்கில ஆளுமைக்குப் பின் ஆரியப் பார்ப்பனியம் தனது வைதீக — வருணத்திமி ரொழுக்கத்திற்குச் சூட்டிக் கொண்ட பிறிதொரு பெயரே இந்து மதம்.

முன்பு தமிழர்க் கெதிராய்த் தாம் வாழ்ந்த பகுதிகளை 'ஆரிய வர்த்தம்' — என்று குறித்ததுபோல், ஆங்கிலேயனிடமிருந்து ஆரியர்கள் தாம் பெற்றுக்கொண்ட நிலத்தை 'இந்துத்தானம்' என்று அடையாளப் படுத்துவதற்கு அவர்களுக்குக் கிடைத்த கருத்தியலே 'இந்து மதம்' என்பது.

மொழியால், அரசியலால், பண்பாட்டால், பொருளியலால், வரலாற்றால் — வேறு எவற்றாலும் ஒன்றுபடாத, ஒன்றுபட்டிராத பல்வேறு இன மக்களைக் கட்டி ஆள அவர்கள் விரித்த அந்த இந்து 'வலை'தான் இன்றைக்கு இந்தியாவில் உள்ள பல்தரப்பு மக்களையும் அவர்கள் எளிதாய்க் கட்டி ஆள்வதற்கானப் பயனை அவர்களுக்குத் தந்திருக்கிறது.

பழந்தமிழர்களின் இயற்கை வழிபாட்டு ஒற்றுமைகளை யெல்லாம் இந்துக்களின் ஒற்றுமை என்றும், அவ் வழிபாட்டுத் தெய்வங்களையெல்லாம் இந்துத் தெய்வங்கள் என்றும் இணைத்துப்

படிப்பகம்

www.padippakam.com



'புராணம்' எழுதி அதற்கு — மூல முதற் கடவுளாய்ப் பிள்ளையாரைச் சுழித்து, இந்தியா முழுக்கக் குடுமி விரித்து வெறியாட்டம் போடுகிறது ஆரியப் பார்ப்பனியம்.

ஒருவன் தேசப் பற்றாளன் என்பதற்கு அடையாளம் யாதெனின் அவன் இந்துப் பற்றாளனாக இருக்கவேண்டும் — என்கிற அளவில் இன்றைக்கு இந்தியப் பற்றுக்கான வரையறையை வகுத்துக் கொண்டது அப் பார்ப்பனியம்.

ஆரியப் பார்ப்பனியத்தின் வருணக் கட்டமைப்பை எதிர்த்தோ, அதன் இணை வடிவமான சாதியக் கட்டமைப்பை எதிர்த்தோ, அதன் பண்பாட்டை, மொழி ஆளுமையை, வல்லரசிய உறவை எதிர்த்தோ யாரும் கருத்து தெரிவித்தாலும், போராடினாலும் அவர்கள் தீவிரர்கள், வன்முறையாளர்களாகக் காட்டப்படுகின்றனர்.

இந்து மதத்தின் பெயரால் — இசுலாமியர்களின் நினை விடங்கள் தகர்க்கப்பட்டால் அது தேசப்பற்றாம்; — ஆனால் இந்துப் பார்ப்பனியத்திற்கு எதிராக சங்கர மடத்தை இடிப்போம் — என்று சொல்வதுகூட வன்முறை வெறித்தனமாம்.

இந்துமதத்தின் பெயரால் — காந்தியை சுட்டுக் கொல்லலாம் — படைக்கலப் பயிற்சி கொடுத்து ஆர்.எசு.எசு.–ஐ வளர்க்கலாம், அவையெல்லாம் தேசப் பற்றாம்; —ஆனால் அதற்கு எதிராகப் பூணூலை அறுப்பதாகச் சொன்னால்கூட அது தேசத் 'துரோகத்' தனமாம், 'ஜனங்'களை வேறுபிரிக்கும் 'துவேஷத்'தனமாம்.

ஆக — இந்து மதத்தின் பெயரால் 'அணு'க்குண்டு வீசப்பட்டால் கூட அதனால் பெருவாரியான மக்கள் கொல்லப் பட்டால்கூட, அது இந்தத் தேசத்தைப் பாதுகாக்க என்பதாகவே இந்த ஆண்டைகள் கொக்கரிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்தியாவைப் பாதுகாப்பது என்பது — இந்தியாவில் உள்ள மக்களைப் பாதுகாப்பது — மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பது — வாழ்வியலைப் பாதுகாப்பது — சொந்தப் பொருளியல் முன்னேற்றத்தைப் பாதுகாப்பது — என்றெல்லாம் கருதிக்கொண்டால் நாம் ஏமாளிகள். இந்தியாவைப் பாதுகாப்பது என்பது — இந்து மதத்தை பாதுகாப்பது — இந்துப் பாதுகாவலனாக இன்றைக்குப் பிறப்பெடுத்திருக்கிற 'பிள்ளையாரை'ப் பாதுகாப்பது என்பதில்தான் இந்தியப் பாதுகாப்பைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கின்றனர்.

தென்மாவட்டங்களில் ஆளுமைச் சாதியர் வெறித்தனத்தால் அடக்கப்படுகிற அடிமைத்தமிழரின் பாதுகாப்பைப் பற்றியோ,

படிப்பகம்

www.padippakam.com



இசுலாமிய மதம் சார்ந்த ஏழைத் தமிழர்களுக்கு வாழ்வியல் உரிமை இல்லை; உயிர்ப்பாதுகாப்பு இல்லை என்பதுபற்றியோ இந்த ஆண்டைகள் கவலை கொண்டதே இல்லை.

ஆனால், பிள்ளையார் சிலைகளுக்கு அவற்றின் பூணூல்கூட அறுந்து விடக்கூடாது என்று ஆயிரக்கணக்கான காவலர்களின் பாதுகாப்பு...

பிள்ளையார் சிலைகளைக் கரைப்பதில் எந்த இடையூறும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று இந்தியப் படைத் துறையினரின் அளவில் பாதுகாப்பு....

ஆக — இந்தியாவைக் காப்பாற்றுவது என்பதன் பொருள் இந்து மதத்தைக் காப்பாற்றுவது என்பதில் வந்து நிற்கிறது. இந்து மதத்தின் படிமங்கள் மீதான மதிப்பை இந்தியாவின் மீதான மதிப்பாகப் புரியவைக்கிறது இந்தியப் பார்ப்பனியம்.

இந்த உண்மையே இந்தியத் தலைமையமைச்சரின் ஆரியத் திருவாயால் அண்மையில் வெளிப்பட்டிருக்கிறது.

தென் ஆப்பிரிக்காவில் இருக்கும் ஆரிய சமாச்சு நிறுவனக் கூட்டத்தில் கலந்து கொண்ட வாச்சுபேயி "இந்துவியம் என்பது மதமல்ல — அது ஒரு வாழ்வியல் முறை என்றும், கடவுள் மறுப் பாளர்கள்கூட அந்த வாழ்வியல் முறைக்குட்பட்டவர்களே" என்றெல்லாம் பேசியிருக்கிறார்.

இந்துவியம் என்பது ஒரு மதமாக மட்டும் இல்லை என்பதை நாம் உணர்ந்திருக்கிற போதும், அது ஓர் ஆளுமைக்கான அரசியல் கருத்து என்பதை ஆணித்தரமாய், அழுத்தந்திருத்தமாய்ச் சொல்லாததன் காரணத்தால் — எதிர்த்துப் போராடாததன் காரணத்தால் அதை ஒரு வாழ்வியல் முறை என்று வாச்சுபேயி பேச நேர்ந்திருக்கிறது.

அது வாழ்வியல் முறை எனில், யாருக்கான வாழ்வியல் முறை என்பதே நம் அடிப்படைக் கேள்வியாதல் வேண்டும். பொதுவாக அனைவர்க்கும் என்பதும், நல்லது என்பதும், நடுநிலை என்பதுமான ஒன்று பொதுப்பட அனைவர்க்குமானதாக இருந்திட இயலாது.

ஆளுமை செய்கிற ஒருவனும், அடிமைப்படுத்தப்பட்டிருக்கிற மற்றொருவனும் என்கிற இரு வாழ்வியல் முறைக்கு இடைப்பட்ட நடுநிலை என்பதுகூட—ஆளுமையினனின் பல ஆளுமைச் செய்திகளுக்கு இணங்கிப் போகிற தன்மையைக் காட்டுவதே அல்லாமல் —அடிமைப் படுத்தப்பட்டிருக்கிற உரிமை முழக்கத்திற்கானதாக அது இருந்திடாது.

படிப்பகம்

www.padippakam.com



ஆக — நடுநிலை என்கிற போக்கு அரசியலுக்கோ பிற அரங்கிற்கோ சிறிதும் இடமில்லாத நிலையில் வாச்சுபேயி அருளிய 'இந்துவிய வாழ்வியல் முறை' என்பது — வருணத்திமிரொழுக்கத்தின் வாழ்முறையாகத்தானே இருக்கிறது.

இந்துவியம் என்பதை வாழ்முறை என்று சொன்னாலும் சரி, இந்துவியம் என்பதே இந்திய மக்கள் அனைவரின் வாழ்முறை என்று வாச்சுபேயி வரிந்து கட்டினாலும் சரி — அத்தகைய ஆண்டைக் கான இந்திய வாழ்முறை என்பது பல்வேறு தேசிய இன மக்களின் உரிமைகளையும் ஒடுக்குவது என்பதாகவும், அடிப்படை ஏழை மக்களை வருணத்திமிரொழுக்கங்கொண்டு நசுக்குவது என்ப தாகவுமே நாம் சரவரப் புரிந்து கொள்ளல் வேண்டும்.

ஆரியப்பார்ப்பனியத்தின் ஆளுமையை எதிர்ப்பது என்பது அதன் இந்தியக் கட்டுருவாக்கத்தை எதிர்ப்பது என்றும், இந்தியக் கட்டுருவாக்கத்தை எதிர்ப்பது என்பது இந்துவியத்தை எதிர்ப்பது என்றுமே ஆகும்.

அஃதாவது, இந்துவியத்தை எதிர்க்காமல் இந்தியத்தை எதிர்க்க முடியாது என்பது போலவே, இந்தியத்தை எதிர்க்காமலும் இந்து வியத்தை வீழ்த்தமுடியாது என்பதில் நாம் தெளிவடைதல் வேண்டும்.

எனவேதான்

*இந்து மதம் என்பது எவ்வகை மாந்த முன்னேற்றத்திற்கும் சிறிதும் பயன்படாது. மாந்த இனத்தையே கட்டழிக்கவல்ல இக் கொடிய மதம், அடித்து நொறுக்கப்பட வேண்டிய காட்டு விலங்கு! சுட்டுப் பொசுக்கப்பட வேண்டிய ஒரு நச்சுக் காடு! தூர்த்து மூட வேண்டிய ஓர் அறியாமை நச்சுப் பொய்கை! மக்களை முன்னேற விடாமல் மடமைச் சேற்றில் புதைந்து போகச் செய்கின்ற படு சேறு நிறைந்த ஒரு சாப் பள்ளத்தாக்கு! இத்தன்மையுள்ள இந்து மதத்தினின்று வெளியேறுவதற்கு மிக்க தன்மான உணர்வும், வெட்டிச் சலுகைகளைத் தூவென்று காறித் துப்பி யெறிகின்ற பற்றற்ற துணிவும், வாழ்க்கை என்பது இதுவென்று தேர்கின்ற மனவிளக்கமும் வேண்டும்........*

*எனவே, இந்துமதத்தினின்றும் மதப் பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத் தினின்றும் விடுபட வேண்டுமானால் நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டே ஆகல் வேண்டும்.*

— என்கிற நம் அருந்தமிழ் ஐயா பாவலரேறு அவர்கள் வகுத்த நெறிமுறையை நடைமுறைக்கானதாய்ச் சிந்திக்க வேண்டுவதே இன்றைக்கு நம் முன்னுள்ள பெருங்கடமையாக நாம் உணர்தல் வேண்டும். ○

படிப்பகம்

www.padippakam.com

# செய்திகள்

## மறைமலைநகரில் அடிகளார் விழா!

தமிழ்க்கடல் மறைமலையடிகளாரின் 123ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா தி.பி. 2029 ஆடவை 31 அன்று (15.7.98) மறைமலைநகரில் நடைபெற்றது.

தமிழ் ஆய்வரங்கம், வள்ளுவர் மன்றம், வள்ளலார் பேரவை, நமக்குள் நாம், பெரியார் அண்ணா இலக்கியப் பேரவை, எச்சுனோரா தமிழ்வளர்ச்சி மன்றம், கம்பன் கழகம், அ.உ.நி. பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகம், நல்வாழ்வுச் சங்கம், மறைமலைநகர் வளர்ச்சிக் கழகம், அரசு அலுவலர் வீடு ஒதுக்கீட்டாளர் நலச் சங்கம், குடியிருப்போர் சங்கம், ஓய்வு பெற்ற அலுவலர் சங்கம், வணிகர்கள் சங்கம், சிட்டுக்குருவி வானொலிச் சிறுவர் சங்கம், மகளிர் சேவா சங்கம், மனவளக்கலை மன்றம், மூப்பரவை(Doyens), இருப்புப் பாதை நகர் (Rail Nagar) நல்வாழ்வுச் சங்கம், இருப்புப் பாதை நகர்த் திருவள்ளுவர் பேரவை ஆகிய 22 அமைப்புகள் சார்பில் இவ்விழா நடைபெற்றது. அன்று காலை நகரிலுள்ள அடிகளார் திருவுருவச் சிலைக்கு மாலையணிவிக்கப்பெற்றது. திரு. வ. வேம்பையன் வரவேற்றுப் பேசினார். புலவர் க. தமிழமல்லன், திரு. சிம்சன் கண்ணன், திரு. த.நா. சகந்நாதன், நடுவர் பஞ்சாட்சரம் ஆகியோர் உரையாற்றினர். புலவர் தமிழ்ஞானசம்பந்தன் நன்றி நவின்றார். இம் மறைமலையடிகளார் விழா தமிழ்மொழி இனவுணர் வாளர்களை ஒருங்கிணைக்கும் முயற்சியாகப் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது.

## பெரியவர் சாமிநாதன் நினைவுப்பள்ளித் திறப்புவிழா!

புதுவைச் செந்தமிழ் அறக்கட்டளையின் கல்விப் பணித் திட்டத்தின்கீழ், பெரியவர் ந. சாமிநாதன் நினைவுப்பள்ளித் திறப்பு விழா, தி.பி. 2029 கடகம் 31 ஞாயிறு (16.8.98) அன்று முற்பகல், புதுச்சேரி மீனாட்சிப்பேட்டை — மாரியம்மன் கோயில் தெருவில், பேரா. ம.இலெ. தங்கப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. ந.மு. தமிழ்மணி வரவேற்புரை யாற்றினார். திரு. சீனு. அரிமாப் பாண்டியன் அறிக்கை படித்தார். பள்ளி, பெயர்ப்பலகை ஆகிய வற்றை அமைச்சர் சிவகுமார் திறந்துவைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு. ந. அரங்கசாமி மாணவர்கட்குச் சீருடை

படிப்பகம்

www.padippakam.com



வழங்கினார். கல்வித்துறைச் செயலர் திரு.ந. இராசசேகர் பள்ளிக்கு விளையாட்டுப் பொருள்கள் வழங்கினார்.

சொல்லாய்வு அறிஞர் அருளியார், 'தெளிதமிழ்' ஆசிரியர் திரு. மு. இறைவிழியன், 'தமிழ்அருவி' ஆசிரியர் திரு. நயினை விசயன் (செருமணி), முனைவர் இரா. திருமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலவர் சி. வெற்றிவேந்தன் நன்றி நவின்றார்.

**திரு. பழ. நெடுமாறன் முழுநலம் பெறுக!**

தமிழர் இயக்கத் தலைவரும் தமிழ்நாட்டில் தமிழீழத் தொடர்பான முயற்சிகளில் அக்கறையோடு ஈடுபட்டு வருபவருமான திரு. பழ. நெடுமாறன் அவர்கள், நெஞ்சக அறுவை மருத்துவம் செய்யப் பெற்றுப் பிணிதீர்ந்து ஓய்வாக இருந்து தேறிவருகிறார். அவர் விரைவில் முழுமையான உடனலம் பெற்று இயக்கப் பணிகளில் முனைப்பாக ஈடுபட விழைகிறோம். கடந்த மடங்கல் 12 அன்று *(28.8.98)* தென்மொழியின் சார்பில் புலவர் இறைக்குருவனார், திரு. ம்ா. பூங்குன்றன் ஆகியோர் திரு. பழ. நெடுமாறன் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்து நலம் உசாவி வந்தனர்.

**புச்சையப்பன் – அமுதா மணவிழா!**

தென்மொழியன்பரும் புதுவை – ஐயன்குடிப்பாளையம் திரு. முருகையன் – பெரிய பாளையத்தாள் இணையரின் மகனுமான செல்வன் பச்சையப்பன், சென்னை – மயிலார்ப்பூர் திரு. தட்சணா மூர்த்தி – மோகனா இணையரின் மகள் செல்வி அமுதா ஆகியோர் திருமண விழா தி.பி. 2029 மடங்கல் 21 ஞாயிறு (6.9.98) அன்று புதுவை இரெட்டியார்பாளையம் புதுநகரில் சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் தலைமையிலும் திரு. வீ. குப்புசாமி அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

திரு. எ. சிவானந்தம் தமிழ் வாழ்த்து இசைத்தார். திரு. கோ.மு. தமிழ்ச்செல்வன் வரவேற்புரை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தி, பேரா. ம.இலெ. தங்கப்பா, திருக்குறள்மணி இறைக் குருவனார், திரு. விழுப்பரையன், திரு. தாமரைக்கோ, திரு. இறை. பொற்கொடி ஆகியோர் உரையாற்றினர். மணமகன் பச்சையப்பன் நன்றி நவின்றார்.

**பொன்னுதலி – நாகவரசன் வாழ்க!**

நெய்வேலி தென்மொழி அன்பர் பொறியாளர் செ. மேதலைவன் – பாப்பாத்தி இணையர் மகள் செல்வி மருத்துவர் பொன்னுதலிக்கும், சேலம் பாவட்டம்பாளையம் திரு. ப.

படிப்பகம்

www.padippakam.com



பழனியப்பன் – இராசாம்மாள் இணையர் மகன் செல்வன் மருத்துவர் ப. நாகவரசனுக்கும் தி.பி. 2029 மடங்கல் 17 அன்று திருச்செங்கோட்டில் நடைபெற்ற திருமணத்தையொட்டி, மடங்கல் 22 அன்று (7.9.98) நெய்வேலியில் திருமுதுகுன்றம் நகர்மன்றத் தலைவர் பஞ்சவரணம் அவர்கள் தலைமையில் திருமண வரவேற்புவிழா நடைபெற்றது. பொறியாளர் செ. மேதலைவன் வரவேற்புரை நிகழ்த்தினார். மணமக்களை வாழ்த்தி மேனாள் அமைச்சர் திரு.

கே.ஏ. செங்கோட்டையன், திருக்குறள்மணி இறைக்குருவனார், பேரா. ம.இலெ. தங்கப்பா, முனைவர் இரா. திருமுருகன், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. பெ. மணியரசன், சித்தர் திருமுருகனடி யார், சித்த மருத்துவர் சி. இராமச்சந்திரன், திரு. முருகுதண்டபாணி, திரு. ஆ. கருப்பையா, திரு. சுந்தரமூர்த்தி மற்றும் பலர் உரையாற்றினர். தொடர்ந்து தேனிசைச் செல்லப்பா குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது. மணமக்கள் நன்றி நவின்றனர்.

**'நமக்குள் நாம்' – கலந்துரையாடல்!**

மறைமலைநகர் தமிழ் மொழி இன உணர்வாளர்களின் 'நமக்குள் நாம்' கலந்துரையாடல் கூட்டம் ஒவ்வோர் ஆங்கில மாத இறுதி ஞாயிற்றுக் கிழமையிலும் காலை 10 மணி முதல் 12 மணி வரை, மறைமலைநகர் இணைவு–1, பெரியாழ்வார் நான்காம் குறுக்குத் தெரு, பழனி இல்லத்து மாடியிலுள்ள திருவள்ளுவர் அரங்கத்தில் நடைபெறுகிறது. அமைப்பின் தலைவராகத் திரு. சொ. ஞானசம்பந்தமும், செயலாளராகத் திரு. வ. வேம்பையனும், பொருளாளராகத் திரு. சி. சிவலிங்கமும் பொறுப்பேற்று இயங்கி வருகின்றனர்.

**ஈரோடை இராமலிங்கம் தாயார் பழனியம்மாள் மறைவு**

நெடுநாள் தென்மொழியின் புரவலர்களுள் ஒருவரும் பாவலரேறு ஐயா அவர்கள்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவரு மான ஈரோடை பாவேந்தர் மன்றச் செயலாளர் திரு. இராமலிங்கம் அவர்களின் அன்னையார் திரு. பழனியம்மாள் அவர்கள் அண்மை யில் இயற்கையெய்திய செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறோம். எண்பத்து மூன்று அகவை நிரம்பிய அம்மையார் அவர்கள் சில நாள் உடல்நலங் குன்றியிருந்தார். மறைந்த அம்மையார் அவர்கட்கு இராமலிங்கம், குமரன் என்னும் ஆண்மக்கள் இருவரும் பெண்மக்கள் நால்வரும் உள்ளனர். வாழ்க பழனியம்மாள் புகழ்!

படிப்பகம்

www.padippakam.com

# ஆவது அறிவார்!

மக்களுள் அறிவிற் சிறந்தவர்கள் என்று உலகத்தவராற் சுட்டப் பெறுவோரும் மதித்துப் பாராட்டப் பெறுவோரும் பெரும்பாலுங் நூற்பயிற்சியில் வல்லவராகவும் தாம் பயின்றவற்றை வெளிப்படுத்தும் சொல்லாற்றல், எழுத்தாற்றல் வாய்ந்தவராகவுமே காணப் பெறு கின்றனர். அவற்றாற்போர்ந்த பட்டங்களும் பரிசுகளுமே அவர்களை அறிமுகப்படுத்துகின்றன.

நூல்கள் என்பனவெல்லாம் வரலாற்றுப் பதிவுகளேயாம். வரலாறு என்ற அளவில் அரசர் குடும்பச் செய்திகளும் படை யெடுப்புகளும் போர்க்களங்களும் இன்ன பிறவுமே நம் கண்முன் வருகின்றன. ஆனால், கடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் வரலாறே. நாட்டு வரலாறு மக்கள் வரலாறு முதலாயின மட்டுமல்ல; அறிவியல் அறிஞர் எடிசன் புதுப்புனைந்தனவும் மேதை அயின்சுதீனின் தெரிவியல் புரிவியல்களும் பற்றிய கல்வியுங்கூட வரலாற்று வகைப் பட்டதாகவே வைக்கப்படும்.

ஒருவர் எத்துணைக் கற்றவராயினும் கடந்த கால நிகழ்ச்சிக ளையோ அன்றாடச் செய்திகளையோ தெளிவாகத் தெரிந்து வைத்திருப்பினும் அவற்றை மற்றையோர் முன் மளமளவென ஒப்பிக்கவும் பலபட விரித்துரைக்கவும் திறம் பெற்றிருப்பினும் அவற்றால் மட்டும் பெறத்தக்க பெரும்பயன் ஏதுமில்லை.

எதிர்காலம் பற்றிய அறிவே உண்மையில் அறிவென்று சிறப்பித்து உரைத்தற்கு ஏற்புடையது. நாளையோ மறுநாளோ அதன் பின்னரோ என்ன நடக்கும்: அதன் விளைவு எத்தகையதாக இருக்கும் என்று கணித்து அதற்கேற்பத் திட்டமிட்டுச் செயற்படுபவனே அறிவாளியாக மதிக்கப்படத் தகுந்தவன். அவ்வாறு கணித்தற்கு அடிப்படையாக இருத்தலாலும் திட்டமிட்டுச் செயற்படுதற்குத் தெளிவூட்டுந் திறத்தாலுமே கடந்தகால — நிகழ்கால அறிவும் தெளிவும் பயனுடையவாகின்றன. அவ்வாறு பயன்படாத கல்வியுங் கல்வியாகாது; அதனை அங்ஙனம் பயன்கொள்ளத் தெரியாதவன் எத்துணைக் கற்றவனாயினும் அறிஞனாகான். இது பற்றியே,

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

என்கிறார் திருவள்ளுவர்.

அற்றங்காக்குங் கருவி என்றும், செறுவார்க்கும் அழிக்கலாகா உள்ளரண் என்றும் புனைந்துரைப்பதோடு அறிவின் திறத்தை மேலும் பலவாறு விளக்கியுரைக்குந் திருவள்ளுவர் விளைவு நோக்கி வினை படுதற்கு வழிவகுப்பதே அறிவு என்பதனை, அஃது உடையார் மேல் ஏற்றி 'அறிவுடையார் ஆவது அறிவார்' என்று உடன்பாட்டு வகை யான் உரைத்ததூஉம் அன்றி, அறிவிலார் 'அஃது அறிகல்லாதவர்' என்று எதிர்மறை வாய்பாட்டானும் எடுத்து வலியுறுத்தியிருப்பது உணர்ந்து இன்புறுதற்குரியது.

— குரிசில்

படிப்பகம்

www.padippakam.com



## நூல் அறிமுகம்

**காவிரி அங்கும் இங்கும்:**

தொகுப்பாசிரியர் திரு. **பூ.அர. குப்புசாமி** அமைப்பாளர் காவிரி காப்புக் குழு, 19, மேற்கு மடவளாகம், கரூர் – 639 001. பக்கங்கள் : 240, விலை : உரு. 40.00.

*"இன்று உள்ள நிலைமையையும், இதுவரை நடந்து வந்த நடப்புகளையும் வைத்துச் சிந்தித்தால், ஒருவேளை நாம் காவிரியைக் காக்க முடியாமலேயே போய்விடலாம். நீரில்லாத காவிரியை நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை. அப்படியொரு நிலை ஏற்படின், தமிழகத்தின் நெற்களஞ்சியம், வானம் பார்த்த நிலமாகும். ஏறத்தாழ 25 இலக்கம் குறுக்க நிலங்களின் வேளாண்மைப் பாழாகும். நிலத்தடி நீர் இன்னும் கீழே போகும். ஏறத்தாழ 10 இலக்கம் உழவுக் கூலிகள், சிறு உழவர்கள், மற்றும் குத்தகை உழவர்கள் கொடிய பஞ்சத்தால் பாதிக்கப்படுவார்கள்.*

*தமிழகத்திலிருந்து காவிரியைத் தட்டிப் பறிக்கும் எத்துவாளித் தனத்திற்கு எதிராக, தமிழகத்திற்கு மேற்சொன்ன கொடுமைகள் நேரா வண்ணம் தடுக்க, தமிழக இளைஞர்களைச் செயல்படச் செய்யும் ஓர் உந்து ஆற்றலாக இந் நூல் அமைந்திடும்".*

**கார்ல் மார்க்சு – 'முதல்': (பாடம் : ஒன்று)**

மொழிபெயர்ப்பாசிரியர் : வழக்கறிஞர் திரு. **சோதிப்பிரகாசம்** வெளியீடு பொன்மணி பதிப்பகம், முதல் குறுக்குத் தெரு, சிறு தொண்டன் தெரு, மணவாள நகர், திருவள்ளர் மாவட்டம் – 602 002. பக்கங்கள் : 136, விலை : உரு. 30.00.

*'முதலி'ன் முதல் பாடம் மட்டும் மொழிபெயர்க்கப்பட்டு சிறுநூலாய் வெளியிடப்பெற்றுள்ளது. தமிழில் வெளிவந்துள்ள முன்னைய மொழி பெயர்ப்புகள் தமிழ்ச்சொற்களால் முற்றும் எழுதப்பட்டவை என்பதைவிடச் சமற்கிருதச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் மிகுதியாகக் கையாளப் பட்டு எழுதப்பெற்றன. மாறாக, இம்மொழிபெயர்ப்பு ஆசிரியர் நல்ல தமிழ்ச் சொற்களை இயல்பாகக் கையாளுகின்றார். மொழிபெயர்ப்பு மெய்யான தமிழ் மொழி பெயர்ப்பு என்ற பெருமையை இவர்தம் சொல்லாட்சிகள் காட்டுகின்றன. முன்னைய மொழி பெயர்ப்புகளில் இருந்து விலகி, புதிய புதிய சொற்களையும் கையாண்டுள்ளார் என்பதற்கு 'முதல்' எனும் நூலின் பெயரே சான்றாகும்".*

**காவிரி நீர் உரிமைக்குக் கானல் நீர் ஒப்பந்தம்:**

வெளியீடு : **தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி,** 53 (அ) சமீன் தார் குடியிருப்பு, புது ஆற்றுச் சாலை, தஞ்சாவூர் - 613 001. பக்கங்கள் : 20, விலை : உரு. 3.00.

*"காவிரிக்காக நடத்தப்படுகிற போராட்டத்தின் தருக்க ஈட்டி முனையே இவ் வெளியீடு"*

தென்மொழி அச்சகம், சென்னை - 5 தொலைபேசி : 854 7829

படிப்பகம்